Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-11 24-04-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 65



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்

(சி-11481)



-நீர்வாழ்உயிர்வள ஆசிரியர்சங்கத்தால்-

## தேசியத்தலைவர் பிரபாகரனுக்கு பாராட்டுக் கேடயம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

நீர்வாழ் உயிர்வள ஆசிரியர் சங்கத்தால் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கு பாராட்டுக் கேடயம் நேற்று வழங் கப்பட்டுள்ளது.

நீர்வாழ் உயிர்வள ஆசிரியர் சங்கத்தால் கடல்வள கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து வெளியேறிய ஆசிரிய மாணவர்களால் மேற்படி கேடயம் வழங் கப்பட்டுள்ளது.

இக்கேடயத்தினை நேற்றுக்காலை 11.00 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள கல்விக்கழக நடுவப் பணியகத்தில் செங்கோட்டையன் கேட்போர் கூடத்தில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங் குமரன் ஆகியோரிடம் நீர்வாழ் உயிர்வள தொழில் நுட்ப செயலாளர் (12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை அமெரிக்க அரசு எதிர்க்கவில்லை!

## தமிழ்க் கூட்டமைப்பினருடனான சந்திப்பில் றொக்கா தெரிவித்ததாகச் சம்பந்தன்





(திருகோணமலை)

விடுதலைப்புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை அமெரிக்கா எதிர்க்கவில்லையென அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான இராஜாங்க உதவிச் செயலாளர் கிரிஸ்ரினா றொக்கா தெரிவித்துள்ளார். தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இத்தகவலை தம்மிடம் வெளியிட்டதாக தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சம்பந்தன் இத்தகவலை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது நாளாகத் தொடரும் ஆனையிறவு வெற்றி விழா நிகழ்வுகள்

(கிளிநொச்சி)

ஆனையிறவு வெற்றி நாள், தீச்சுவாலை முறியடிப்பு என்பனவற்றை முன்னிட்டு விடுதலைப்புலிகளின் சமரணிகளிடையே நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டி மற் (12ஆம் பக்கம் பார்க்க)



## தீச்சுவாலை வெற்றிச்சமரை முன்னிட்டு துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி

ஆனையிறவுப் பெரும் தளம் கைப்பற்றப்பட்டதன் ஐந்தாம் ஆண்டு நிறைவு நாளும், தீச்சுவாலை முறியடிப்பு வெற்றிச்சமரை முன்னிட்டும் தமிழீழ விளையாட்டுத்துறையால் மாபெரும் துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி ஒன்றினை நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி காலை 6.00 மணிக்கு புளியங்குளம் தடைமுகாமில் இருந்து ஆரம்பமாகி கண்டிவீதி ஊடாக முகமாலை தடைமுகாமில் முடிவடையவுள்ளது. இப்போட்டியில் கலந்துகொள்ள இருக்கின்ற வீரர்கள் உடன் தங்கள் பெயர்களை மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ஊடாக அல்லது தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப்பணியகத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளின் வாகனங்கள் மீது மட்டக்களப்பில் படையினரால் கெடுபிடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் அரசியல் பணியில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளின் வாகனத்தை சோதனையிடுவது என்ற போர்வையில் சிறிலங்கா படையினர் அடாவடித்தனத்தில்ஈடுபட்டுள்ளனர். மட்டக்களப்பில் இருந்து களுவாஞ்சிக்குடி நோக்கிச் சென்ற வாகனத்தை அருகருகே உள்ள புதுக்குடியிருப்பு, கிரான் குளம், களுதாவளை ஆகிய மூன்று இராணுவ முகாம்களில் மாறிமாறி சிறிலங்கா படையினர் வழிமறித்தனர். வாகனத்தையும் அதில் கொண்டு சென்ற பொருட்களையும் சோதனையிடுவதாகக் கூறி அவர்கள் கொண்டு சென்ற பெறுமதியான பொருட்களை உடைத்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் சிறூர்தி மோதி வயோதிபர் கோரப் பலி!

(நெல்லியடி)

வடமராட்சி மாலுச் சந்திக்கு அண்மையாக நேற்று ஈருருளியில் சென்று கொண்டிருந்த வயோதிபரை சிற்றூர்தி மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் கோரமான முறையில் பலியானார்.

இலகடி அல்வாய் கிழக்கு அல்வாயைச் சேர்ந்த சுப்பிரமணியம் இராசதுரை (வயது - 67) என்னும் வயோதிபரே விபத்தில் பலியானார்.

மாலுச் சந்திக்கு அண்மையாக ஆலடி (12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ வாகனம் மோதி வவுனியாவில் யுவதி படுகாயம்

வவுனியா பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் இராணுவ வாகனம் மோதி யுவதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். நேற்று மாலை 3.00 மணியளவில் தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்றுவிட்டு துவிச்சக்கரவண்டியில் திரும்பிக் கொண்டிருந்த போது இராணுவ வாகனம் மோதி ஜெராட் அனித்தா ([illegible] வயது -20) என்பவரே காயம் அடைந்துள்ளார் இராணுவத்தினர் மோதிவிட்டு தப்பிச் சென்று விட்டனர் ஏற்கனவே புதுக்குளம் வீதியில் இளைஞன் ஒருவரை இராணுவ வாகனம் மோதிய போது அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (21)

## வரிவிளம்பரம்

### 2007 A/L கணித, விஞ்ஞான பிரிவு வகுப்புக்கள் நடைபெறும் நேரசூசி

பௌதிகவியல் வகுப்பு - வெள்ளி 3.00-4.00 மணி,சனி 8.00-9.00 மணி, 11.00-1.00 மணி (எம்.எஸ்.தவபாலன்), இரசாயனவியல் - புதன் 11.00-1.00 மணி, 4.00-5.00 மணி, வியாழன் 11.00-1.00 மணி (எஸ்.சண்), இணைந்த கணிதம் - சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 4.00-5.00 மணி (எஸ்.சிறிதரன்), உயிரியல் - சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 5.00-6.00 மணி (எம். நேசன்) இடம் கேம்பிறிச் கல்லூரி, கிளிநொச்சி. (நிர்வாகம்) (சி.11780)

### காணி விற்பனைக்கு

பரந்தன் முல்லைவீதி, புதுக்குடியிருப்பு தேவிபுரம் சந்தியில் இருந்து 200 மீற்றர் தொலைவில் நல்லபலன் தரும் 2 1/2 ஏக்கர் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:- (கோடீஸ்வரன் கடை, தேவிபுரச்சந்தி) (5834)

### தவறிவிட்டது

சின்னையா சிவகுமார் 1 ஆம் வட்டாரம் முள்ளியவளை என்பவருடைய சிறிலங்கா சாரதி அனுமதிப் பத்திரமும், தமிழீழ சாரதி அனுமதிப்பத்திரமும் 18.04.2005 ஆம் திகதி பொருண்மிய பண்ணைக்கும், கட்சன் வீதிக்கும் இடையில் சுவிற் சென்ரர் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பொருண்மிய நடுவப்பணியகம் அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (6075)

### நூல்கள் வந்துள்ளன

புதிய பல தமிழ் நூல்கள் வந்துள்ளன. (மொழி,அறிவியல், பகுத்தறிவு, பெண்ணியம், யோகாசனம், மருத்துவம், போராட்டம், சிறுவர் கதைகள், கவிதை, புதினம்) அறிவமுது, கிளிநொச்சி. (6070)

### வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரத்தில் அழககம் (சலூன்)ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. வேலை தெரிந்தவர்களும், வேலை பழக விரும்புபவர்களும் வரலாம். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு:- "பொதிகை அழககம்" கனகபுரம் தெரு, கிளிநொச்சி. (6072)

### 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), (சி.11779)

# மே தினத்தில் அணிதிரளுமாறு கல்விச் சமூகத்திற்கு அழைப்பு

(கிளிநொச்சி)

எதிர்வரும் மே மாதம் முதலாம் நாள் கிளிநொச்சி நகரில் நடைபெறவிருக்கும் மே நாள் எழுச்சிப் பேரணியிலும் பொதுக் கூட்டத்திலும் கல்விச்சமூகத்தினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு உரிமை உணர்வோடு அழைப்பதாக கிளிநொச்சி மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவையாளர் தெரிவித்துள்ளனர்.

கல்வி சமூகத்தின் அளப்பரிய சொத்தாகும். காலங்காலமாக தமிழர்கள் தமது கல்விப் பாரம்பரியத்தை சிறப்பாக பேணிக்காத்து வந்தார்கள். காலணித்துவ ஆட்சியின் பின்னர் அதிகாரத்தைக் கைப்பற்றிய சிங்கள இனவாத அரசியலாளர்கள் எமது கல்விப்பாரம்பரியத்தின் தொடர்ச்சியைத் சிதைத்தார்கள் ஆட்சிப் பீடம் ஏறிய இனவாத அரசாங்கங்கள் கபடத்தனமான முறையில் தமிழ் மக்களின் கல்வியை சீரழித்தார்கள் என்பது வரலாறு, எமது மாணவர்களின் கல்வி உரிமைகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் மறுக்கப்பட்டன என்பதுடன் கல்விச்சமூகத்தின் உரிமைகள் தொடர்பில் ஆபத்தான நிலை இன்றும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இத்தகைய தளைகளிலிருந்து எம்மை விடுவித்துக்கொள்வதற்காக ஒன்றுபட்ட தமிழ்த் தேசியத்தின் கீழ் அணிதிரண்டு கல்விச் சமூகத்தின் உரிமைக்குரலை உலகறியச் செய்வோம் என அவர் தமது அழைப்பில் தெரிவித்துள்ளார்.

## மே தின நிகழ்வு தொடர்பாக மல்லாவியில் கலந்துரையாடல்

எதிர்வரும் மே தின நிகழ்வை சிறப்பாக நடத்துவதற்கான ஒன்றுகூடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மல்லாவி அரசியல்துறைச் செயலகத்திலுள்ள பாரதி ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாங்குளம், பாண்டியன் குளம், துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட அரச, அரசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தகநிலையங்கள் பொது அமைப்புக்கள், பாடசாலைகள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், சனசமூக நிலையங்கள், கமக்கார அமைப்புக்கள், மீனவசங்கங்கள், விளையாட்டுக்கழகங்கள் அனைத்துத் துறைசார்ந்தவர்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலுக்குத் தவறாது கலந்து கொள்ளுமாறு அரசியல்துறையினர் கேட்டுள்ளனர். (24)

## துணுக்காயில் கால்நடைகள் தொல்லை

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்து வருகின்றது. துணுக்காய்ப் பகுதியில் கால்நடைகள் பிரதான வீதிகளில் தங்கி வருவதால் வீதிவிபத்துக்கள் அதிகரித்தும் பலர் காயங்களுக்கு உள்ளாகியும் வருகின்றனர். சம்பந்தப்பட்ட கால்நடைகள் வளர்ப்போர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டுமென மக்கள் கோரியுள்ளனர். (24)

## கொடுப்பனவு வழங்கல்

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மக்கள் வங்கி மூலமான கொடுப்பனவு இதுவரை கிடைக்கப் பெறாத கிராம மக்களுக்கு இன்று வழங்கப்படவுள்ளதாக மக்கள் வங்கி முகாமையாளர் தெரிவித்தார். அம்பலவன் பொக்கணை, மாத்தளன் ஆகிய இரு கிராம மக்களுக்கு மாத்தளன் கிராம அலுவலர் அலுவலகத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (20)

## தருமபுரம் கிழக்கு அபிவிருத்திக்கான தேவைகள் குறித்துப் பகுப்பாய்வு

(விசுவமடு)

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள தருமபுரம் கிழக்கு கிராமத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கான தேவைகள் குறித்துப் பகுப்பாய்வு நடைபெற்றுள்ளது.

தருமபுரம் மகாவித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினர் தமிழர் புனர்வாழ்வு கழகத்துடன் இணைந்து கிராமிய கணிப்பீடு தொடர்பான கருத்தமர்வுகளை நடத்தினர். இதன் மூலம் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவன பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இது தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வில் யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி, தமிழர்புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் கணேசலிங்கம், அரசசெயலக உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (46)

## சுனாமியால் பெற்றோரை இழந்தவர்களுக்கு சமூக நலத்துறை திணைக்களம் உதவும்

(முல்லைத்தீவு)

சுனாமியினால் முல்லைத்தீவுப் பகுதியில் தாய் தந்தையரை இழந்த சிறுவர்களுக்கான உதவித் திட்டம் வடகிழக்கு மாகாண சமூக நலத்துறை திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளது. தாயையும் தந்தையையும் இழந்த சிறுவர்களை பராமரிக்கும் பாதுகாவலர், உறவினர் ஒருவரை நியமித்து மாதாந்தம் சிறுவரைப் பராமரிப்பதற்கு ஐந்நூறு ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. இது தொடர்பான பதிவுகளை அந்தந்தப் பகுதி பிரதேச செயலகங்களில் உள்ள சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களிடம் மேற் கொள்ளலாம். இப்பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளும் படி கரைதுறைப்பற்று சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் சிவபாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (20)

## வவுனியா கல்வியியந் கல்லூரியில் ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரியர்களுக்கான கல்வி செயலமர்வு ஒன்று வரும் செவ்வாய்க்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சினால் கோரப்பட்ட செயலமர்வு தொடர்பான விண்ணப்பங்களுக்கு அமைய விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கே இச் செயலமர்வு நடைபெறவுள்ளது. இச்செயலமர்வில் பங்கு பற்றுவதற்காக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களை நாளை திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கல்லூரியின் உபபீடாதிபதி சிதம்பரநாதன் அவர்கள் கேட்டுள்ளார். (10)

## ஒட்டுசுட்டானில் குழந்தைகளுக்கு விற்றமின் 'ஏ' வழங்கல்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள ஆரம்பசுகாதார நிலையங்களில் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரை ஆறு மாதம் முதல் ஐந்து வயது வரையான குழந்தைகளுக்கு விற்றமின் 'ஏ' உயிர்ச்சத்து கொடுக்கப்படவுள்ளது.

எனவே இப்பகுதியில் வாழும் மக்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்குத் தவறாது மருந்துகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இம்மருந்து வழங்கல் நடவடிக்கை யுனிசெப் நிறுவனத்தின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படுகின்றது. (05)

## உடைந்த நிலையில் பாலம்

(முல்லைத்தீவு)

புளியங்குளத்திற்கும் மதியாமடுவுக்கும் இடைப்பட்ட முல்லைத்தீவு வீதியில் உடைந்த நிலையில் உள்ள பாலம் நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் இருக்கின்றது.

இதற்கான திருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்ட போதும் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் பாலத்தின் ஒருபகுதி முற்றாக உடைந்துள்ளதால் பெரியவாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (20)

324, Palaly Road, Jaffna.

தகவல் தொழில் நுட்பத்தில்



BIT

கொழும்பு பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்பு

விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

- கற்கை நெறிகள் MCS நிறுவனத்தில் நடைபெறும்.
- பரீட்சைகள் யாவும் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் யாழ் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும்.
- விண்ணப்பிப்போர் O/Lஇல் கணிதபாடத்தில் தேகைமையுடன் A/Lஇல் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
  - (O/Lஇல் தேகைமை பெறாதோர் A/Lஇல் Maths அல்லது Bio பிரிவுகளில் அல்லது பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒன்றில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். Economics, Logic, Commerce, Accounts, Business Statistics, Geography)
  - (2005இல் A/Lபரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம், ஆயினும் பெறுபேறுகளின் போது மேற்குறித்த தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்)
- கற்கை நெறிக்கான மாணவர்கள் தெரிவுப்பரீட்சை ஒன்றின் மூலமே தெரிவு செய்யப்படுவர்.
- தெரிவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் MCS நிறுவனத்தில் இலவசமாக நடாத்தப்படும்.
- கற்கை நெறியில் முதல் ஆண்டைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் வழங்கப்படும். *(Certificate in Information Technology)*
- கற்கைநெறி முழுவதனையும் பூர்த்தி செய்வதன் மூலம் நீங்களும் ஒரு கணனிப் பட்டதாரியாகலாம்.
- எந்தவொரு பல்கலைக்கழக மாணவர்களும் BIT கற்கைநெறியை பயில்வதற்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
- BIT கற்கைநெறியின் 1ம் ஆண்டினை MCSஇல் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு கனடிய பல்கலைக்கழகங்களில் கற்கைநெறியினை தொடர்வதற்கான அனுமதி.

விண்ணப்ப முடிவுத் திகதி : 30-04-2005

விண்ணப்பப் படிவங்களிற்கும் மேலதிக விபரங்களிற்கும்,

சி. 11794 MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

உயர்கல்வி டிப்ளோமா கற்கைநெறி-2004/2005


மேற்படி கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுக் கல்விச் செயற்பாடுகள் 02.05.2005 இல் ஆரம்பமாகும்.

துணைவேந்தர்
21.04.2005

(சி.11813)

# தீவிரவாதம் முற்றாக ஒழிந்தால் தான் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும்

*பாகிஸ்தான் அதிபர் முஷாரப்*



(மணிலா)

**தீவிரவாதம் ஒழிந்தால் தான் காஷ்மீர பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் நிறுத்தினால் தான் காஷ்மீர் உட்பட எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும் என்று இதுவரை இந்தியா கூறி வந்தது. இப்போது அதை ஒத்த கருத்தென்றே பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பும் கூறி யுள்ளார்.**

முஷாரப் இந்திய பயணத்தை முடித்துக் கொண்டு பிலிப்பைன்ஸ் சென்றிருந்த போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

காஷ்மீரில் ராணுவ நடமாட்டமோ, தீவிரவாத நடவடிக்கைகளோ, தனி நாடு போராட்டமோ, இல்லாத நிலையில் காஷ்மீரின் பாதுகாப்புப் பொறுப்பை அந்தப் பகுதி மக்களே ஏற்றுக்கொள் ளும் சூழ்நிலை ஏற்பட்டால்தான் காஷ்மீ பிரச்சி னைக்கு தீவு காணமுடியும்.இந்தப் பிரச்சினை யில் மக்களே நேரடியாக ஈடுபட்டு இருக் கிறார்கள். இந்திய துணைக்கண்டத்தில் அமைதி நல்லிணக்கம் நிலவவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். எனவே அதன் அமைதிப் பேச்சுவார்த்தையை திசை திருப்ப முடியாது அதன் பின்னால் மக்கள் இருப்ப தால் அனைத்து தலைவர்களும் அந்தப் பேச்சு வார்த்தையை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். காஷ்மீ மக்களின் எதிர்கால விருப் பத்தை நான் பகிர்ந்து கொள்கிறேன். பூகோள ரீதியில் பார்த்தால் காஷ்மீ பாகிஸ்தான் பக்க மும் இருக்கிறது. இந்தியாவின் பக்கமும் இருக் கிறது.

அதை ஏழு பகுதிகளாகப் பிரிக்க வேண்டும். நாம் ஒரு பகுதியை கண்டு பிடித்து அதை ஒப்புக்கொள்ள வேண்டி இருக்கிறது. அந்தப் பகுதியை ராணுவ நடமாட்டம் இல்லாத பகுதியாக மாற்ற வேண்டும். அதன்பின் அதன் நிலையை மாற்றி அமைக்க வேண்டும்.

அந்தப் பகுதியில் ராணுவ நடமாட்டம், பயங்க ரவாத நடவடிக்கை, தனிநாடு போராட்டம் இல் லாத பகுதியாக மாற்ற வேண்டும். அதன்பின் நிலைமை உருவாகி அந்தப் பகுதியில் பாது காப்புப் பொறுப்பை அந்த பகுதி மக்களே ஏற்கும் சூழ்நிலை ஏற்பட்டால்தான் இதைச் செய்ய முடியும். இவ்வாறு முஷாரப் கூறினார்.



மணிலாவில் எரிபொருள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள் விலை யேற்றத்தைக் கண்டித்து நடைபெறவுள்ள பேரணியில் கலந்து கொள்ளச் செல்லும் பெற்றோரைத் துவாரம் ஒன்றினூடாக அவதானிக்கும் பிலிப்பைன்ஸ் சிறுவர்கள்.

# அமெரிக்காவில் மீண்டும் தாக்குதல்; பின்லேடன் புதிய திட்டம்



(வோஷிங்டன்)

செப்ரெம்பர் தாக்குதல் போன்று மீண்டும் ஒரு தாக்கு தலை அமெரிக்காவில் நடத்த பின்லேடன் ஆதரவாளர்கள் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தடவை அமெரிக்காவை கடந்து செல்லும் விமானங்களைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதலை நடத்த அவர்கள் திட்டமிட்டு இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

தினமும் 50 விமானங்கள் அமெரிக்காவை கடந்து செல்கிறது. இதைத் தொடர்ந்து அமெரிக்க வான் எல்லை வழியாகச் செல்லும் வெளிநாட்டு விமானங்களுக்கு இப்போது புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க வான் எல்லை வழியாகச் செல்லும் விமானத்தின் பயணிகள் பட்டியலை முன் கூட்டியே தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்காத விமானங்கள் அமெரிக்கா வழியாகச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

முன்பு இந்தக் கட்டுப்பாடு அமெரிக்காவில் தரை இறங்கும் விமானங்களுக்குத் தான் இருந்தது. கடந்த சில நாட்களுக்கு முன்பு சவுதிஅரேபியாவைச் சேர்ந்த இரண்டு தீவிர வாதிகள் அமெரிக்கா வழியாக விமானத்தில் சென்றது தெரியவந்தது. இதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# போர் நிவாரண நிதி மசோதா அமெரிக்கா செனட் ஒப்புதல்

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் போர் தொடர்பான செலவுக்காக எண்ணாயிரத்து 130 கோடி ரூபாய்க்கான நிதி ஒதுக்கீட்டு மசோதாவுக்கு செனட் உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்துள்ள னர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி யையும், ஈராக்கில் சதாம் ஆட்சியையும் வீழ்த்திய பின் இரு நாடுகளிலும் கணி சமான அளவில் அமெரிக்க படையினர் தங்கி யுள்ளனர். இதற்கான செலவுகளுக்கும், போரில் உயிரிழந்த வீரர்களின் குடும்பத்திற்கும் நிவாரண உதவி வழங்கவும் சுனாமியால் பாதிக் கப்பட்ட நாடுகளுக்கு உதவவும் எண்ணாயி ரத்து 130 கோடி ரூபாய் செலவிடுவதற்கு வகை செய்யும் மசோதாவுக்கு அமெரிக்க செனட் ஒப்புதல் அளித்துள்ளது.



ஜகார்த்தாவில் நடைபெறும் ஆசிய ஆபிரிக்க தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கும் யப்பானியப் பிரதமர் யுனிஷிரோ கொய்ஷிமி சுனாமி பாதிப்புக்குள்ளான அசே மாநில பாடசாலைக் கட்டடத்தை பார்வையிட்டுச் செல்கிறார்.

# ஐ.நா. பாதுகாப்பு சபையில் மாற்றம் வேண்டும் அனான்

(ஜகார்த்தா)

ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்படவுள்ள சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு ஆசிய ஆபிரிக்க நாடுகள் முழு ஆதரவு அளிக்க வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலர் கொபி அனான் வலியுறுத்தி யுள்ளார்.

ஆசிய ஆபிரிக்க நாடுகளின் இரண்டு நாள் கூட்டம் இந்தோனே சியாவில் வெள்ளிக்கிழமை தொடங்கி யது. 100இற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றனர். இதில் கொபிஅனான் பேசியதாவது;

ஐ.நா.பாதுகாப்பு சபையில் தற் போதைய கால நிலைமைக்கேற்ப மாற்றம் மேற்கொள்ளப்படவேண்டும்.

வரும் செப்டம்பரில் நியூயோர்க் கில் நடைபெறவுள்ள ஐ.நா. சபைக் கூட்டத்தில் சீர்திருத்த நடவடிக்கை குறித்து விவாதிக்கப்படவுள்ளது. அப் போது இந்த மாநாட்டில் பங் கேற்றுள்ள தலைவர்கள் தாங்களா கவோ அல்லது தங்கள் பிரதிநிதி களை அனுப்பிவைத்தோ சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

அதற்கான நேரம் தற்போது வந்துள்ளது.


உலக நாடுகளுக்கும், ஐக்கிய நாடுகளுக்கும் 2005ஆம் ஆண்டு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. பல வளரும் நாடுகள் உறுப்பினர் களாக சேர்ந்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலை விரிவுபடுத்தவேண்டும்.



வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளின் வறுமையைப் போக்க தங்கள் வருமானத்தில் ஒரு குறிப் பிட்ட தொகையை ஒதுக்க முன்வர வேண்டும்.

ஐ.நா.சபைக்கு புதிய, நிரந்தர முழு அதிகாரம் கொண்ட மனித உரிமை அமைப்பு முக்கியத் தேவை யாகவுள்ளது என்றார்.

# விமானத்தை தகர்க்க சதி செய்தார்; பாதத்துக்கு 13ஆண்டுசிறைத்தண்டனை



கடந்த 2001ஆம் ஆண்டுடிசம்பர் 22ஆம் திகதி பரீசில் இருந்து மியாமி நகருக்கு சென்ற அமெரிக்க எயர் லைன்ஸ் விமானத்தை வெடிகுண்டு மூலம் தகர்க்க முயன்ற ரீச்சர்டு ரீட் என்பவருடன் தொடர்புடைய நபருக்கு 13 வருட சிறைத் தண்டனை வழங் கப்பட்டுள்ளது. அந்த விமானத்தை தகர்க்கும் கூட்டு சதியில் ஈடுபட்ட சுர்ஜித் பாதத் என்பவருக்கே இத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து பொலிசார் இவரை கைது செய்து லண்டன் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர். விசாரணை யின் போது வெடிகுண்டு மூலம் விமானத்தை தகர்க்க சதிசெய்ததை அவர் ஒப்புக்கொண்டார்.

இந்த ' நிலையில் வழக்கை விசாரித்த நீதிபதி அட்ரியன்புல் போர்டு, குற்றவாளி சுர்ஜித் பாதத் துக்கு 13 ஆண்டுகள் சிறைத் தண் டனை விதித்து நேற்று முன் தினம் நீதிமன்றில் தீர்ப்பு கூறினார்.



தென் பிலிப்பைன்ஸ் போறோ முஸ்லிம் விடுதலை இயக்கத்தினர் காட்டுப்புறத்திலிருந்து தமது சுடுகல திறனை வெளிக்காட்டுகின்றனர். (மேற்படி இயக்கமும் அரசும் மூன்று சகாப்த போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரப் பேச்சுக்கள் நடத்த அயல் நாடான மலேசியாவின் உதவியை கோரியிருப்பது குறிப்பிடத்தக்கது)

# சிங்களப் பேரினவாதிகளின் ஒடுக்குமுறைகளுக்கெதிராக

# மே முதலாம் நாளில் அனைவரும் கிளர்ந்தெழுவோம்!

### -கிளிநொச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை அறைகூவல்

(அலுவலக செய்தியாளர்)

**சிங்கள ஆளும் வர்க்கத்தினாலும், சிங்களப் பேரினவாதிகளாலும் நடத்தப்பட்டு வரும் எமது தேசிய இனத்திற்கு எதிரான இன ஒடுக்கு முறைக்கு எதிராக சர்வதேச தினமான மே-1இல் நாம் அனைவரும் கிளர்ந்தெழுவோம். இவ்வாறு சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை அறைகூவல் விடுத்துள்ளது.**

அவ் அறைகூவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது- சர்வதேச தொழிலாளர் தினம் அடக்கு முறையாளர்களால் தொழிலாளர்கள் அடக்கப்பட்டு அவர்களது உழைப்பிற்கு தகுந்த ஊதியம் மறுக்கப பட்டு கடுமையான தொழில் வதைப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ள மையை எதிர்த்து தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட புரட்சியே இன்று சர்வதேச தொழிலாளர் தினமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இத்தினத்திலே தமிழீழ மக்கள் ஆகிய நாமும் சமூக அடக்கு முறைக்கு எமது தேசியத்தைக் காக்கும் வகையில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் கொள்கை இலட்சிய வேட்கைக்கு செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு மே- 1இல் கிளர்ந்தெழுவோம். அன்றைய தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய ஆர்ப்பாட்ட எழுச்சிப் பேரணியும் பொதுக் கூட்டமும் நடை பெறவுள்ளதால் தமிழீழ குடிமகன் ஒவ்வொருவரும் இப்பேரணிக்கு அணி திரளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் சிங்கள ஆளும் வர்க்கத்தாலும், சிங்களப் பேரின வாதிகளாலும் நடத்தப்பட்டு வரும் எமது தேசிய இனத்துக்கு எதிரான இன ஒடுக்கு முறைக்கு எதிராக நாம் பேரணியுடன் சமூகத்துக்கு எடுத்துக் கூறும் வகையில் எமது கோசங்களையும், பங்களிப்புகளையும் செய்ய அணி திரளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

ஒரு சமூகமாயினும், ஒரு இனம் ஆயினும் பலம் கூடிய வர்களால் அவர்களது உரிமை தேசியம், கலை, கலாச்சாரம் கெடுக்கப்படும் போது அவ்வினம் பலம் கூடியவர்களுக்கு எதிராக தமது உரிமையை பெறும் பொருட்டு கிளர்ந்தெழ நிர்பந்திக்கப்படுகிறது. அந்த வகையிலேயே எமது போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. எம்மை பேரினவாதமானது பல வகை யிலும், பல கோணத்திலும் அடக்க முற்பட்டு வந்துள்ளதை நாம் அனைவரும் அறிவோம். இப்பேரினவாதத்தின் அடக்கு முறைக்கு எதிராக எமது இனமானது காலத்துக்கு காலம் சாத்வீக போராட்டங்களை முன்னெடுத்த போதிலும் அவை அனைத்தும் சிங்கள காடையர்களைக் கொண்டும், அரச பயங் கரவாதத்தைக் கொண்டும் அடக்கியே வரப்பட்டுள்ளது. இதனைக கருத்தில் கொண்டே எமது தேசியத் தலைவர் எமக்கு ஒரு படையை உருவாக்கி தமிழீழ தாயகத்தையும், தேசியத்தையும் காப்பாற்றும் வகையில் அவலத்தைத் தந்தவனுக்கே அவலத்தை திருப்பிக் கொடு எனும் தாரக மந்திரத்துடன் எமது போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதை நாம் அனைவரும் கருத்தில் கொண்டு எதிர்வரும் மே-1 இல் நடைபெறும் தொழிலாளர் போராட் டத்தில் பங்கு கொண்டு எமது உணர்வுகளை சர்வதேச சமூகத் திற்கும் பேரினவாதிகளுக்கும் எடுத்துக் காட்டும் பொருட்டு இப்பேரணியில் அனைவரும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் (சோ)

## இந்திய அகதி முகாம்களிலிருந்து தாயகம் திரும்பியோர் கவனத்திற்கு!

(அலுவலக செய்தியாளர்)

இடம்பெயர்ந்து இந்திய அகதி முகாம்களில் வசித்து தற்போது மீளவும் தமது சொந்த இடங்களில் குடியமர்ந்துள்ள குடும்பங் களுக்கான உதவித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள் ளதாக கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார். அத்துடன் இந்தியாவிலிருந்து திரும்பிய அனைத்துக்குடும் பங்களும தமது கிராம அலுவலர்களிடம் உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளும் வண்ணம் வேண்டியுள்ளார். (சோ)

## வவு. தே. க. க. யில் பகிடிவதை தொடர்பாக மேலும் இருவர் இடைநிறுத்தம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியில் பகிடிவதை யில் ஈடுபட்ட மேலும் இருவர் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கல்லூரி ஒழுக்காற்றுச் சபை அறிவித்துள்ளது.

மிகமோசமான பகிடிவதையில் ஈடுபட்ட இரண்டாம் வருட ஆசிரியப் பயிலுநர்களில் இனங்காணப்பட்ட ஆறுபேர் ஏற்கனவே இடைநிறுத்தப்பட்டிருந்தனர். இவர்கள் மீது கல்லூரி ஒழுக்காற்றுச் சபை மேற்கொண்ட விசாரணைகளின் போது மேலும் பலரை இவர்கள் இனங்காட்டி உள்ளனர். பகிடிவதையில் ஈடுபட்ட இரண்டாம் வருட ஆசிரியப் பயிலுநர்களினால் இனங்காணப்பட்டவர்களில் மேலும் இருவரை விசாரணை செய்தபோது அவர்களும தமது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளனர். பகிடிவதையில் ஈடுபட்ட மேலும் சில ஆசிரியப் பயிலுநர்கள் மீதான விசாரணை கல்லூரி இரண்டாம் தவணைக்காக ஆரம்பமான பின் மேற்கொள்ளப்பட்டு அவர்களும் இடைநிறுத்தப்படவுள்ளதாக கல்லூரி ஒழுக்காற்றுச் சபையினர் மேலும் தெரிவித்துள்ளனர். (10)

## சித்த ஆயுர்வேத மருத்துவ முறையை மேம்படுத்த கிளிநொச்சியில் மூலிகைச் சங்கம் முயற்சி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்திற்கான மூலிகை சங்கத்தின்



புதிய குழுத்தெரிவு கடந்த வியாழக்கிழமை நிர்வாக சேவை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

தமிழீழ சுகாதாரசேவைப் பணிப்பாளர் ச.விக்கிரமன் தலைமையில் நடைபெற்ற இக்குழுத் தெரிவில் மூலி கைச்சங்கத்தில் புதிய தலைவராக பூநகரி பிரதேசச் செயலா சிறிஸ்கந்தராசா தெரிவுசெய்யப்பட்டார். மேற்படி மூலிகைச் சங்கத்தின் புதிய குழு தெரிவு செய்யப்பட்டதிலிருந்து மாதாந்தக கூட்டம் ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக் கிழமை நடைபெறும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்துடன் சித்த ஆயுர்வேத மருத்துவ முறையினைப் பேணுவதற்கு மூலிகைகளை வளர்ப்பதும் கட்டாயமானதாகும் என்றும் அதன முக்கியத்துவம் பற்றியும் பேசப்பட்டுள்ளது. காலை 10.00 மணிக்கு நடைபெற்ற இக்குழுத் தெரிவுக் கூட்டத்தில் மூலிகைச் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் மற்றும் நிர்வாகசேவை உறுப்பினாகளும் கலந்து கொண்டனர். (கு)

## நாடகப் பயிற்சிப்பட்டறை நிறைவு நாள் நிகழ்வுகள்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச பாடசாலை ஆசிரியர்களுக்காக ஜி.ரி.இசற், பி.ஈ.எஸ்.எவ், வி.ஈ.ஆர்.பி அனுசரணையுடன் நாடகப் பயிற்சிப் பட்டறை நிறைவு நாள்நிகழ்வுகள் நேற்றுக் காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை நடைபெற்ற. கிளிநொச்சி அழகியல் கலாமன்ற மண்டபத்தில் மேற்படி பயிற்சிப்பட்டறை நிகழ்வு நடை பெற்றமை குறிப் பிடத்தக்கது. (சோ)

## உலக வங்கி பிரதிநிதிகள் வவுனியாவிற்கு விஜயம்

(வவுனியா செய்தியாளர்)

உலக வங்கி பிரதிநிதிகள் குழு ஒன்று கடந்த வியாழனன்று வவுனி யாவிற்கு விஜயம் செய்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற் கொள்ளப்படும் வேலைத்திட்டங் களைப் பார்வையிடுவதற்காக உலக வங்கியின் ஆறு பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழு வவுனியாவிற்கு விஜயம் செய்தது. இக்குழுவினர் உலக வங்கியின் நிதியுதவியுடன் அபிவிருத்தி செய்யப்படும் காட்டு மாங் குளம் கிராமத்திற்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மாறாஇலுப்பைக் கிராமத்திற்கும விஜயம் செய்து வேலைத் திட்டங் களை பார்வையிட்டுள்ளனர். (10)

## பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கொழும்பு லயன்ஸ் கழகம் உதவி

கொழும்பு நகர லயன்ஸ் கழகத்தினரால் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஊடாக பெ.அ.பு.நிறுவன முதன்மைச் செயலகத்தில் நேற்று



முன்தினம் மாலை 4.00 மணியளவில் பாதிக்கப்பட்ட பெணகள், சிறுவர் களுக்கு துவிச் சக்கர வண்டிகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், கதிரைகள், உடு புடவைகள், உணவு பொருட் கள் என்பன வழங் கப்பட்டுள்ளன. மேற்படி நிகழ்வு பெ.அ.பு நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் சுதர்சினி தலைமையில் நடைபெற்றது.

## வட்டக்கச்சிப் பிரதேச மக்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேச மக்களுக்கு சர்வோதய நிறுவன உதவியுடன் கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினரால் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இராமநாதபுரம், மாவடி மாயவனூர், சிவிக்சென்ரர், பன்னங் கண்டி, அம்பாள் நகர், கட்சன்வீதி ஆகியஇடங்களுக்கு 20,21,22 ஆம் திகதிகளில் வழங்கப்பட்டன. மற்றைய இடங்களுக்கும் இவ் நுளம்புவலை கள் வழங்கப்படவுள்ளன. (12)

## புதுக்குடியிருப்பு பிரதேச மாதர் சங்க சங்கமம்

(முல்லை)

புதுக்குடியிருப்பு பிரதேச மாதர் சங்கங்களுக்கான மாதாந்த பெண்கள் சங்கமம் கடந்த வியாழனன்று காலை 10.00 மணிக்கு முல்லை மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச மாதர் சங்கத் தலைவி தலைமையில் ஆரம்பமானது.

பொதுச்சுடரினை பாலையடி பங்குத்தந்தை, புதுக்குடியிருப்பு பிரதேச மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் ஆகியோர் ஏற்றினர், தேசியக் கொடி யினை அரசியல் துறையைச் சேர்ந்த ஈழவன் ஏற்றினார், கருத்துரைகளை மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் வேழினி, மாவட்டஅரசியல் துறைப்பொறுப்பாளர் முகுந்தன் உட்பட பலர் வழங்கினர். (20)

## தட்சனாமருதமடு முக்கொலை குறித்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்றில் பாரப்படுத்தல்

உயிலங்குளம் இராணுவ சோத னைச்சாவடி ஊடாக மாத்தளையி லிருந்து வன்னிப்பகுதிக்கு வாட கைக்கு அமர்த்திச் செல்லப்பட்ட பேருந்து ஒன்றில பயணம் செய்த மூவர் தட்சனாமருதமடுவில் கொலை செய்யப்பட்ட முக்கொலை வழக்கு விசாரணையில் கொலைக் குற்றம் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, இந்த வழக்கை வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்து மாறு உத்தரவிட் டுள்ளார்.

இச்சம்பவத்தில் கைவிடப்பட்ட நிலையில் பேருந்து தட்சனாமருத மடு காட்டுப்பகுதியில் காணப்பட்ட துடன், மூன்று பேரின் அழுகிய சடலங்களும் கண்டெடுக்கப்பட்டன. இந்தக் கொலை தொடர்பாக சந்தே கத்தின் பேரில் ஒருவரை தமிழீழ காவல்துறையினர் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியதுடன், கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் மீது பிரேதப் பரிசோதனை நடத்திய தன் பின்னர் ஓமந்தை இராணுவ சோத னைச்சாவடியில் வவுனியா அரசாங்க அதிபர் ஊடாக இந்தச் சடலங்கள் வவுனியா பொலிசாரிடம் கையளித்தனர்.

எனினும் இந்தக் கொலை நடை பெற்ற இடத்தின் நியாயாதிக்கத்தைக் கருத்திற்கொண்டு இந்தக் கொலை வழக்கின் விசாரணைகள் மன்னார் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் சட்டமா அதி பரின் உத்தரவுக்கமைய இந்த வழக்கு மீண்டும் வவுனியா மாவட்ட நீதிமன் றத்திற்கு மாற்றப்பட்டது. அரங்கவிலையைச் சேர்ந்த ஆர்.என். குலதுங்க, ரஜவெல்ல திகனையைச் சேர்ந்த ஒருவரும் மற்றும் மாத்தளை பகுதியைச் சேர்ந்த மகேன்குமார ஆகியோரே இந்தச்சம்பவத்தில் கொல்லப் பட்டதாக உறவினர்களி னால் அடையாளம் காணப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் 17 பேருடன் உயிலங்குளம் இராணுவ சோதனைச் சாவடி ஊடாக மடு பகுதிக்குக் குறிப் பிட்ட பேருந்து சென்றதாகவும், பின்னர் இவர்களில் 13 பேர் இதே சோதனைச சாவடி ஊடாக வாகன மின்றி திரும்பிச் சென்றதாகவும் சோதனைச் சாவடியில் கடமையி லிருந்த பொலிசாரின் பதிவு களிலி ருந்து தெரியவந்த தகவலின் அடிப் படையில் இந்த முக்கொலை யில் சம்பந்தப்பட்ட 13 பேருக்கு எதிராக வழக் குத் தாக்கல் செய்யப்பட்டது. (21)

# உண்மைக்கான போராட்டங்கள் தோற்காது என்பதை அன்னை பூபதி நினைவு நாள் எடுத்துக் கூறுகின்றது

– யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன்

(வேலணை)

**உண்மைக்கான போராட்டங்கள் என்றும் தோற்றுவிடாது என்பதை அன்னைபூபதியின் நினைவு நாள் எடுத்துக்கூறுகின்றது என வேலணையில் கடந்த 19 ஆம்திகதி நடைபெற்ற அன்னைபூபதி நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.**

அவர் அங்குமேலும் உரையாற்றுகையில்;இன்றைய நாள் பொது மக்களுக்கு பெரிய செய்தியை சொல்கின்றது. குறிப்பாக பெண்களுக்கும் செய்தி சொல்கின்றது அதாவது பெண்களும் எதற்கும் அஞ்சாத மனோதிடமும் துணிவும் உடையவர்களாக உருவாக வேண்டும் என்ற செய்தியை சொல்லுகின்றது எங்களுடைய பண்பாட்டு வளர்ப்பு முறையில் பல போற்றத்தக்க அம்சங்கள் காணப்பட்ட போதும் பெண்கள் மற்றவர்களில் தங்கிவாழ்பவர்களாக. தன்னம்பிக்கை குறைந்தவர்களாக உருவாகுகின்றமைஒரு கவலைப்படத்தக்க அம்சம் ஆகும்.

பெண்களும் தீர்மானகரமான சக்தியாக வேண்டப்படும் இக்கால கட்டத்தில் இது பெரும் தடையாகவுள்ளது. இக்காலத்திற்குப் பொருத்தமான மாற்று வளர்ப்புமுறைக்கு பெண்கள் உள்ளாக்கப்பட வேண்டும். பேரினவாத அரசுகளினால் அடக்கப்படும் போது வெகுண்டெழும் பெண்களாக சமூகத்தில் நிலவும் அனைத்து அநீதிகளுக்கும் எதிராககுரல்கொடுக்கும் மனோதிடம் கொண்டபெண்களாக உருவாக வேண்டும்.

இதனூடாக தமிழ்த் தேசியத்தின் குரலாக பெண்களின் குரலும் ஒலிக்க வேண்டும். இதற்காக கிராமங்கள் தோறும் மாதர் சங்கங்கள் ஊடாகவும் பெண்கள் அமைப்புக்களூடாகவும் எழுச்சி பெற வேண்டும்.

இன்றைய நாளை நாங்கள் இரண்டுவகையாக அனுஷ்டிக்கின்றோம். இதன் நோக்கம் காலையில் அன்னையின்தியாகத்தை. மனப் பூர்வமாக நினைத்து அதை ஒரு விரதமாக அனுஷ்டித்து சக்தி பெறுதலும், மாலையில் உண்மைப்போராட்டத்தின் வெற்றியை கலைமொழியின் ஊடாக கொண்டாடி உணர்வு பெற்று அடுத்த கட்டத்தில் எமது பணி என்ன என்பது பற்றி சிந்தித்தல் என்பதுமாகும். இல்லாவிடில் இது வெறும்சடங்காக, களியாட்டநிகழ்வாக அமைந்துவிடும்

இன்று நாம் மிகவும் சாதகமான சூழலில் இருக்கின்றோம் பெருமளவு நிலப்பரப்பு மீட்கப்பட்டு ஆண்போராளிகளும், பெண் போராளிகளும் தமது சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்று அது இடையில் ஸ்தம்பித்த நிலையிலும் அதனைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்று சர்வதேசமெங்கும் எங்களுடைய பெயர் உச்சரிக்கப்படுகின்றது.

பல்வேறு ராஜதந்திரிகள் எமது தாயகத்திற்குவந்து பேச்சுவார்த்தைகளை நடத்துகிறார்கள். எங்களுடைய இடங்களை, எங்களுடைய மக்களை பார்வையிட்டுச் செல்கிறார்கள். விடுதலைப்புலிகள் தென்னாபிரிக்க நாடுகள் ஐரோப்பிய நாடுகள் எல்லாம் சென்று இந்தப் போராட்டத்தின் நியாயப்பாட்டை விளங்கவைத்துக் கொண்டிருக்கிறார்கள். மிக அண்மையில் தென்னாபிரிக்க நாட்டின் உப தலைவர் அவர்கள் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்அவர்களை சந்தித்தமை எமது போராட்டத்துக்கு கிடைத்த வெற்றி.

இன்னொரு பக்கத்திலே பாராளுமன்றத்தில் நாம் அங்கு நடைபெறும் விவாதங்களில் எமக்கு இடைக்கால அதிகாரத்தின் அவசியத்தையும் சுனாமி கட்டமைப்பின் அவசியத்தையும் வலியுறுத்தி வருகிறோம். ஒவ்வொரு தூதுவராலயங்களுக்கும் சென்று இதனை விளங்கவைக்கின்றோம்.

இதன் ஊடாக அவர்கள் பல உண்மைகளைஅறிந்து கொள்கிறார்கள். பல ராஜதந்திரிகள் மக்கள் பங்களிப்புப் பற்றி அறிய ஆவலாக இருக்கிறார்கள்.மக்கள் நடத்திய வெகுசன போராட்டங்கள் பண்பாட்டுப் பவனிகள், பொங்கு தமிழ்கள் பற்றி எடுத்துக் கூறி வருகிறோம். பொங்கு தமிழ் எப்படி உருவெடுத்தது? எவ்வாறு வளர்ந்தது? எவ்வாறு சர்வதேச நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஊடாகப் பரவியது? என்பது பற்றியெல்லாம் கூறினோம். இப்படியான ஒரு சாதகமான நிலையில் இதனை மேலும் சாதகமாக்க பொதுமக்கள் மேலும் மேலும் அணிதிரண்டு விடுதலைக் குரலை வெளிப்படுத்தவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## மக்கள் குடியிருப்புக்களை அண்மித்துள்ள படைமுகாம்கள் அகற்றப்பட வேண்டும்

### -தமிழீழ பெண்கள் பண்பாட்டு மையம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மக்கள் குடியிருப்புக்களை அண்மித்துள்ள படைமுகாம்கள் அகற்றப்படல் வேண்டும் என தமிழீழ பெண்கள் பண்பாட்டு மையம் கோரிக்கை விடுத்துள்ளது.

மக்களின் குடியிருப்புக்களை அண்மித்தும் பொது மக்கள் நடமாட்டமுள்ள பகுதிகளிலும் உள்ள படைமுகாம்கள், மற்றும் காவலரண்களில் நிலை கொண்டிருக்கும் படையினரது செயற்பாடுகள் பெண்களின் இயல்பான செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றமையைச் சுட்டிக்காட்டியே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மக்கள் நடமாட்டமுள்ள பகுதிகளில் நிலை கொண்டுள்ளபடையினர் பெண்களை கேலி செய்வது, அச்சுறுத்துவது போன்ற தகாத செயல்களில் ஈடுபடுவதாக யாழ். குடாநாட்டின் பல்வேறு பெண்கள் அமைப்புகளும் சுட்டிக் காட்டியுள்ளன. (33)

## பல்கலைக்கழக வளாகத்தில் மாவீரர் நினைவுத் தூபி அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வளாகத்துள் மாவீரர் நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த சனவரி மாதம் 17 ஆம் திகதி ஆரம்பித்துவைக்கப்பட்ட இத்தூபி அமைப்புப் பணிகள் தற்போது துரிதமாக இடம் பெற்று வருகின்றன. தற்போது துரிதமாக இடம்பெற்றுவரும் இம்மாவீரர் தூபி அமைப்பானது இந்த ஆண்டு மாவீரர் தினத்தில் திறந்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களின் நினைவுகளை ஒரு வரலாற்று ஆவணமாக பாதுகாப்பதற்காகவே இது யாழ் பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. (33)

## புலன்வலுவிழந்த மாணவர்களின் விபரம் திரட்டும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பகுதிகளில் இருக்கும் பாடசாலைகளின் மாணவர்களுள் புலன்வலுவிழந்த மாணவர்களது விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

புலன்வலுவிழந்தவர்களுக்கான புனர்வாழ்வுத்திட்டத்தில் இம்மாணவர்களையும் பயன்பெறச்செய்யும் நோக்குடன் இவ்வாறு விபரத்திரட்டல்கள் இடம்பெறுகின்றன.

குறிப்பாக செவி,கண்,உடல் உறுப்புகள் என்பவற்றின் செயற்பாட்டு திறன் இன்மையால் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து இவ்விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.எனவே சம்பந்தப்பட்ட மாணவர்கள் யாராவது இருப்பின் அவர்கள் அதிபர்கள் ஆசிரியர்களூடாக தம் விபரங்களைப்பதிவு செய்து கொள்ளுமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார். (33)

## யாழ்.தீவகக் கடற்பரப்பில் இந்திய மீனவர் அத்துமீறல்

(தீவகம்)

யாழ். தீவகக் கடற்பரப்புகளில் மீண்டும் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியிருப்பதாக அப்பகுதிக்கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு அத்து மீறி நுழைந்து மீன்பிடிக்க வரும் இந்திய மீனவர்கள் கனரக மீன்படி விசைப்படகுகள், றோளர்கள் போன்ற கடற்கலவகைகளுடன் வந்து இத்தீவகக் கடற்பரப்பில் இறால், கடலட்டை போன்றவற்றை பிடித்துச் செல்கின்றனர்.

இதனால் தீவக மீனவர்கள் இப்பகுதிக்குச் சென்ற கடற்றொழிலில் ஈடுபடமுடியாத நிலை தோன்றியுள்ளது எனினும் இதுவிடயத்தில் சிறிலங்கா கடற்படையினர் அக்கறை காட்டாது இருந்துவருவதாக அப்பகுதி மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (33)

## பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் அடுத்தமாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரையில் இடம் பெறவுள்ளது.

யாழ். மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ள இப்போட்டிகளில் எழுத்தாக்கப் போட்டி, பேச்சுப் போட்டி, வாசிப்புப் போட்டி, மனனப் போட்டி பாவோதல், இசையும் அசைவும், கூத்து, வில்லுப்பாட்டு ஆகிய போட்டிகள் இடம் பெறும். (33)

## மூன்று முக்கிய சைவ ஆலயங்களை புனித பிரதேசமாக்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

நகுலேஸ்வரம், கேதீஸ்வரம் கோணேஸ்வரம் ஆகிய மூன்று ஆலயபிரதேசங்களையும் புனித பிரதேசமாக்க முழுமூச்சுடன் நடவடிக்கைகள் எடுத்துவருவதாக யுனெஸ்கோ நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ஆர்.பீ.பெரேரா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ். பொது நூலகத்திற்கு நடமாடும் சேவைக்கான பேருந்து, மற்றும் நிழற் பிரதிஇயந்திரங்களை கையளித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், தென்னிலங்கையில் கலாச்சார மையங்கள் உருவாக்கப்பட்டு கலாச்சாரம் பேணிப்பாதுகாக்கப்பட்டுவருகின்றது. அஃதேபோல் வடக்குக் கிழக்கிலும் கலாச்சாரமையங்கள் உருவாக்கப்பட்டு தமிழர்களின் காலாச்சாரம் சீராகக் கட்டிவளர்க்கப்படவேண்டும் கட்டடங்களைக்கட்டுவதால் எந்தவித பயனும் இல்லை. மாறாக ஒவ்வொரு உள்ளங் களிலும் நல்ல எண்ணங்களும், அறிவும் வளர்க் கப்பட வேண்டுமெனவும் அவர்மேலும் தெரிவித்தார். (சு)

## உலருணவு விநியோக வழங்கற்கட்டளைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நவம்பர், டிசம்பா மாதங்களுக்கான உலருணவு விநியோகத்திற்குரிய வழங்கற் கட்டளைகளை யாழ்.மாவட்ட செயலக புனர்வாழ்வு புனரமைப்புப் பகுதியில் பெற்று விநியோக நடவடிக்கைகளை ஓரிருநாட்களில் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்டச்செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## மாதகல் மேற்குப் பிரதேசத்தில் படையினரால் பயன்தரு மரங்கள் தறிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாதகல் மேற்குப் பிரதேசத்திலுள்ள இராணுவ அதி உயர்பாதுகாப்பு வலயங்களால்ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தனியார் காணிகளிலிருந்து சிறிலங்காப்படையினார் பயன்தரு பனை, தென்னை மரங்களை தறித்தழிப்பதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இவ்வாறு தனியார் காணிகளிலிருந்து தறிக்கப்படும் பனை, தென்னை மரங்களை குற்றிகளாக்கி அவற்றை இராணுவ வாகனங்களில் ஏற்றிச் சென்று தமது படைமுகாம்களையும், காவலரண்களையும் பலப்படுத்துவதற்காகப் பயன்படுத்தி வருவதாக மேலும் குற்றம் சாட்டியுள்ளனர்.

பனை, தென்னை மரங்களை தறிக்கும் படையினரது செயற்பாடுகள் நிறுத்தப்படல் வேண்டுமெனவும் அவர்கள் கோரியுள்ளனர். (33)

**வைத்திய கலாநிதி டாக்டர் சி. சிவபாலன் (பொறுப்பு மருத்துவர், டாக்டர் பொன்னம் பலம் மருத்துவமனை புதுக் குடியிருப்பு) அவர்களுடனான விசேட சந்திப்பு.**

# எமது மக்களுக்கு—

# சிறந்த மருத்துவ சேவையை வழங்க நாம் பெரும் அவாக்கொண்டுள்ளோம்

டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை 1996 ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அந்தவேளையில் யாழ்ப்பாணத்தில் இருந்து பெருமளவு மக்கள் வன்னிக்கு இடம் பெயர்ந்து வன்னியில் ஏற்கனவே இருந்த மக்களுடன் இணைந்து கொண்ட சூழல். வன்னிமீது இறுக்கமான பொருளாதார நெருக்கடி விதிக்கப்பட்டிருந்த காலம். அந்த வேளையில் போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அப்பொழுது போரினால் காயமடைந்த மக்களுக்கும், தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு இன்னலுற்ற மக்களுக்கும் வைத்திய சேவை வசதி வழங்க வேண்டும் என்ற சமூக சிந்தனை கொண்டவர்களால். இந்த மருத்துவ மனையை வன்னியில் ஆரம்பிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மாங்குளம் ஒலுமடு பகுதியில் ஆரம்பித்வைது வைக்கப்பட்டது.

1997 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட "ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கையினால் மாங்குளத்தில் (ஒலுமடு) செயற்பட்டுக் கொண்டிருந்த இந்த மருத்துவமனை இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்டது.

போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் மிக நெருக்கடியான பொருளாதாரத் தடைகளை எதிர்கொண்டு எங்களுடைய மக்களுக்கு ஒரு சிறப்பான மருத்துவ சேவையை நாங்கள் வழங்கிக்கொண்டிருந்தோம்.

மிகப்பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருக்கின்றார்கள் பெற்று வருகின்றனர். போரினாலும், விபத்துக்களினாலும் காயமடைந்த மக்களுக்கு அவசர சத்திர சிகிச்சையினை வழங்கிக்கொண்டிருந்தோம்.

இதேவேளை, மகப்பேற்று சிகிச்சைகளும் இம்மருத்துவமனையினால் வழங்கப்பட்டது. வெளிநோயாளர் பகுதியில் தினமும் இருநூறுக்கும் மேற்பட்ட மக்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

சமாதான ஒப்பந்தமும், யுத்தநிறுத்தமும் ஏற்பட்டு புதிய சூழல் ஏற்பட்ட போது மருத்துவமனைக்குப் புதிய உபகரணங்களைக் கொள்வனவு செய்து மருத்துவமனையின் தரத்தை அதிகரித்து எமது மக்களுக்கு பூரண மருத்துவ சேவையினை வழங்க வேண்டும் என்ற பேரவாவுடன் செயற்பட்டு வருகின்றோம்.

அந்த வகையில் வெளிநாட்டில் வாழும் எமது தமிழ் உறவுகளின் உதவியும் கணிசமாக எமது மருத்துவமனைக்குக் கிடைத்து வருகின்றது.

குறிப்பாகச் சொல்வதானால் பற்சிகிச்சை உபகரணத் தொகுதி நோர்வே நாட்டிலுள்ள தமிழர்களால் வழங்கப்பட்டிருக்கின்றது. அதேபோன்று இங்கிலாந்து நாட்டில் இருந்த தமிழர்களால் 'ஸ்கானர்' உபகரணத் தொகுதி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் வாழும் சில தமிழ் மருத்துவர்களால் இருதய பரிசோதனை உபகரணங்கள், இரத்தப் பரிசோதனை உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருக்கின்றன.


இந்த உபகரணங்களின் உதவியுடன் எமது மருத்துவ சிகிச்சையின் தரத்தை அதிகரிக்கக் கூடியதாக இருந்தது. அதே வேளையில் வடபகுதியில் கடமையாற்றும் வைத்திய நிபுணர்களையும் எமது மருத்துவமனையுடன் இணைத்து அவர்கள் மூலமும் சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

வெளிநாட்டில் இருந்து மருத்துவம் தொடர்பான நிபுணர்கள் இங்கு வருகை தருகின்றார்கள். அவர்களை நாங் கள் இணைத்து எமதுமக்களுக்குச் சேவை வழங்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துள்ளோம். இதன் மூலம் அவர்களுக்கும் திருப்தி ஏற்படுகின்றது. எமது மக்களுக்கும் அவர்களது வைத்திய நிபுணத்துவ சேவையைப் பெறக்கூடிதாகவுள்ளது.

குறிப்பிட்ட சேவைகள் எமது மக்களுக்கு இலவசமாகவே வழங்கப்படுகின்றன. குறிப்பாக கற்றாக் சத்திர சிகிச்சை, என்பு சத்திரசிகிச்சை போன்றவற்றிற்கு எமக்கு பெரும் செலவு ஏற்படுகின்றது. ஆனால் எங்களுடைய மக்களின் நலன்கருதி கட்டணம் எதுவும் அறவிடாமலே சிகிச்சையினை வழங்குகின்றோம். அவர்களாக விரும்பி எங்களுக்கு அன்பளிப்பினை வழங்கினால் அதனைப்பெற்று மேலும் அவர்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கின்றோம்.

வெளிநாட்டில் வாழும் வைத்திய நிபுணர்கள் ஒரு குறுகியகால விஜயத்தினை இப்பகுதிக்கு மேற்கொண்டு எமது மக்களுக்கு தம்மாலான சேவைகளை வழங்கலாம். அவர்களை இணைத்து சேவையினை வழங்குவதற்கு எமது மருத்துவமனை தயாராக இருக்கின்றது. இதற்கான சகல ஒழுங்குகளையும் செய்து தருவதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

எங்களுடைய மருத்துவமனையின் வசதிகளை வளர்ப்பதன் மூலம் மக்களுக்கு



நல்ல சேவையினை நாம் வழங்க டிய தாக இருக்கும். ஆகவே எங்களுடைய மருத்துவமனையின் வசதிகளை அதிகரிக்கக் கூடியவகையில் நல்ல உபகரணங்களை வெளிநாடுகளில் இருந்து வரும் வைத்திய தொண்டு அமைப்புக்கள் வழங்கலாம்.

அத்துடன் எமது மருத்துவமனை போர்க்காலத்தில் பொருளாதாரத் தடைகள் இருந்த பொழுது ஆரம்பிக்கப்பட்டது. அது இன்று வரை சிறப்பாக எமது மக்களுக்குச் சேவை வழங்கிக்கொண்டிருக்கின்றது.இந்த மருத்துவமனையிலுள்ள அதிகளவான கட்டடங்கள் தற்காலிக கட்டடங்களாக உள்ளன. இவற்றை நிரந்தரக் கட்டடமாக மாற்றி இங்கு தரமான வைத்திய உபகரணங்களை கொண்டு வந்து இதனைத் தரமான மருத்துவமனையாக மாற்ற வேண்டும் என்பது எமது பெரும் அவாவாகும்.

அவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு புலம் பெயர்ந்த நாட்டிலுள்ள எமது தாயக உறவுகளும், எமது மக்களுக்கு மருத்துவசேவை உதவிகளை வழங்க விரும்புகின்ற நலன் விரும்பிகளும் உதவிகளை வழங்கலாம்.

கிளிநொச்சி பொன்னம்பலம் மருத்துவமனைக்குத் தொலைபேசி வசதிகளும், ஈமெயில் வசதிகளுமுள்ளன. இந்த முகவரிகளுக்கு உலக நாடுகளிலுள்ள எமது வைத்தியதுறைக்கு உதவி செய்ய விரும்புபவர்கள்தொடர்புகொள்ளலாம்.

வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகப் பிரதேசங்களில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சேவையினை வழங்குவது போன்று சுகாதாரப் பகுதிகளை மேம்படுத்துவதற்காக " நலவாழ்வு நிறுவனம்" என்ற ஓர் அமைப்பு அண்மைக் காலத்தில் சிறப்பாக செயலாற்றிக்கொண்டு வருகின்றது. இந்த நிறுவன்த்தின் மூலமும் எமக்குரிய உதவிகளை வழங்கலாம்.

போர்நிறுத்தத்தின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினரின் ஒத்துழைப்பு மிகப்பெருமளவில் கிடைத்து வருகின்றது. அவர்களது ஒத்துழைப்பின் மூலம் நாங்கள் சில சேவைத் திட்டங்களை பெருமெடுப் பில் ஒழுங்கு செய்யக் கூடியதாகவுள்ளது. உதாரணமாக திலீபன் மருத்துவ சேவை மூலம் நோயாளர் களை ஒழுங்குபடுத்தித் தருகின்றார்கள். அவர்களும் எங்களுக்கு இடநெருக் கடி ஏற்படும் போது விசேட மருத்துவ சேவைகளை மக்களுக்கு வழங்க வேண்டிய நிலை ஏற்படும் போது தற்காலிகக் கூடாரங்களை அமைத்து எமக்கு உதவிகளைப் புரிகின்றார் கள். சில சந்தர்ப்பங்களில் அம்புலன்ஸ் வசதி களைக் கூட ஏற்படுத்தி நல்ல ஒத்துழைப் பினை வழங்கி வருகின்றார்கள். சில இக்கட்டான நேரங்களில் மருத்துவ உபகரணங் களையும், மருந்துப் பொருட்களையும் கூட அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இவர்களது பூரணமான ஒத்துழைப்பின் மூலமாக நாங்கள் இந்த மருத்துவமனையின் சேவைத்திட்டங்களைச் சிறப்பாக மேற்கொள்ளமுடிகின்றது.

இந்த மருத்துவமனைக்கு தற்சமயம் நோயாளர் காவு வண்டி எதுவுமில்லை. அவற்றை வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களின் நிதியுதவி மூலம் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளோம். அதற்கான வேண்டுகோள்களையும் அனுப்பி வைத்துள்ளோம். அவர்களது உதவிகள் விரைவாகக் கிடைக்கின்றபோது இந்தப் பற்றாக்குறையும் எமக்கு நீங்கும்.

இந்த மருத்துவமனையில் நிரந்தர மருத்துவராக நான் மட்டுமே கடமையாற்றுகின்றேன். தரிசிப்பு மருத்துவர்களாக டாக்டர் கெங்காதரன், டாக்டர் பத்மலோஜினி ஆகியோர் இங்கு பணிபுரிகின்றனர்.

ஆனால் எமது வெளிநோயாளர் பகுதியானாலும் சரி, உள்நோயாளர் பகுதியானாலும் சரி 24 மணி நேரமும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இச்சேவையினை எங்களால் பயிற்றுவிக்கப்பட்ட உதவி மருத்துவர்களின் துணை கொண்டுதான் செய்து வருகின்றோம்.



அதேபோன்று மருத்துவத்துறை சார்ந்த அனைத்துப் பணியாளர்களையும் நாங்கள் பயிற்றுவித்து அவர்களது பணி சிறப்பான முறையில் இம்மருத்துவமனைக்குக் கிடைத் துக் கொண்டிருக்கின்றது. இது ஒரு முன்னுதாரணமான பணி என்றுதான் நான் கருதுகின்றேன். ஏனெனில் அரச நிர்வாகங் களில் நாங்கள் தங்கி இருக்காமல் தமிழர்களால் நிர்வகிக்கப்படும் மருத்துவமனைக்குத் தமிழர்களைப் பயிற்று வித்து ஒரு சிறந்த சேவையை அளிப்பதற்கு இதுஒரு முன்னுதாரணமாகத்திகழ் கின்றது என்று நான் கருதுகிறேன்.

இந்த மருத்துவமனையை பொறுத்தமட்டில் இங்கிருக்கும் உட்கட்டமைப்பு வசதிகள் கண் சத்திரசிகிச்சை போன்ற சிகிச்சை செய்வதற்கு போது மானதாக இல்லை. எனினும் எங்களுடைய சகல வளங்களையும் ஒன்று திரட்டி முழுமையாக பாடுபட்டுத்தான் சிகிச்சை முகாம்களை நடத்துகின்றோம்.

எங்களுடைய மக்களுக்கு நல்லதொரு சேவையினை வழங்க வேண்டும் என்பதற்காகவே முழுமையாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு இவ்வாறான விசேட வைத்திய சேவைகளை வழங்குகின்றோம்.

எமது மக்களுக்கு நல்ல மருத்துவ சேவையை வழங்க வேண்டும் என்ற நீண்ட எதிர்காலத்திட்டங்களை நாங்கள் வைத்துள்ளோம். அவ்வாறானதொரு சேவையினை வழங்க வேண்டும் என்பது எமது நீண்ட நாள் கனவு.

வடபகுதியில் இருதய சிகிச்சையை மேற்கொள்ள எந்தவொரு வசதியும் இல்லை. தென்பகுதிகளுக்குச் சென்றே எமது மக்கள் சிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ளது இதற்காக பெருமளவு நிதிச்செலவு அவர்களுக்கு ஏற்படுகின்றது. இதனால் மிகக் கஷ்டமான சூழலில் அவர்கள் உள்ளனர். இப்படியான ஒரு சிகிச்சையை எமது மண்ணில ஆரம்பிக்க வேண்டும் என்று நாங்கள் ஆசைப் படுகின்றோம். அதற்குரிய வேலைத்திட்டங்களிலும் ஈடுபட்டுள்ளோம்.

**தி.ஜெயக்குமார்,வீ.பிரதீபன்**

சிறுநீரகம் தொடர்பான சிகிச்சையை வழங்குவதற்கான வசதிகளையும் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இந்தளவு பெரிய திட்டங்களை நாங்கள் நிறைவேற்றுவதாக இருந்தால் அது வெளிநாட்டில் வாழும் தமிழ்மக்களின் நிதிப் பங்களிப்புடன் மட்டுமே செய்யக் கூடியதாக இருக்கும். ஏனெனில் எமது உள்ளூர் நிதிவளத்தினை மட்டும் பயன்படுத்தி இவ்வளவு பாரியதொரு வேலைத்திட்டத்தைச் செய்யமுடியாது.

ஒட்டு மொத்தமாகச் சொல்லப்போனால் தரமான ஒரு சிறந்த மருத்துவமனையாக இதனைக் கட்டியெழுப்பி தமிழ் மக்களுக்குத் தமிழர்களால் சேவை வழங்கப்படும் இம் மருத்துவமனை முன்னுதாரணமாக செயற்படுத்த வேண்டும் என்ற அவாவுடன் நாங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

# சுனாமி அனர்த்த நிதியுதவியையும் தடுக்க முயலும் இனவாத சக்திகள்



சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளப்புனரமைப்பதற்கான நிதியை பாகுபாடற்ற முறையில் பங்கீடு செய்வதற்குப் புலிகள் - அரசாங்கம் இணைந்த பொதுக்கட்டமைப்பின் அவசியம் என்பதும் அதனை விரைந்து அமைக்க வேண்டும் என்பதும் சர்வதேச நாடுகளாலும் நிவாரண அமைப்புக்களாலும் வலியுறுத்தப்படும் விடயமாகும்.

ஆனால் சிறிலங்காவில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சூழ்நிலை குறித்துத்தான் இன்னமும் ஐயப்பாடு நிலவுகின்றது. இங்கு மனிதாபிமான ரீதியான நெருக்கடியில் சிக்கியுள்ள மக்களைப் பற்றி சிறிதும் சிந்திக்காத ஒரு மனப்பாங்குதான் காணப்படுகிறது.

20 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற யுத்தம், அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களைச் சீர்செய்வது தொடர்பில் அமைக்கப்பட்ட 'சிரான்' அமைப்பைச் செயலிழக்கச் செய்வதில் குறியாக நின்ற அதேசக்திகள் தான் இதற்கும் எதிராக நிற்கின்றன.

டோக்கியோ உடன்பாட்டின் படி சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகள் வழங்க வாக்குறுதியளித்த 40ஆயிரம் கோடி ரூபா நிதி உதவி சமாதானப் பேச்சுக்களுடன் தொடர்புபடுத்தப்பட்டதாக இருந்த போதும் அந்த நிதி தென்பகுதி அபிவிருத்திக்கு அவசியமானது என்பதை நன்கு அறிந்திருந்தநிலையிலும் அதனை எதிர்த்த சக்திகள் தான் இன்று சுனாமி பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாகுவதற்கும் எதிராக நிற்கின்றன.

ஜே.வி.பி.யைப் பொறுத்தவரையில் உதவிவழங்கும் நாடுகளின் நிதி உதவி தேவையற்றது என்றே கூறுகிறது. தமது மூதாதையர்கள் வெளிநாட்டவர்களின் உதவியில் வாழவில்லை என்று அது கூறியது. இதுபோலத்தான் ஜாதிகஹெல உறுமயவும் கூறிவந்தது. அதேவேளை தேசப்பற்றாளர் தேசிய முன்னணியும் அவ்வாறே கூறிவருகிறது.



இதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு உதவிவழங்கும் நாடுகளின் நிதியுதவி தேவை. ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அது தயாரில்லை. என்பதை கடந்தவருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து டிசம்பர்மாதம் சுனாமி அலைகள் தாக்கும் வரையான காலப்பகுதியில் அது நடந்து கொண்ட முறை வெளிப்படுத்தியது.

இன்றும் கூட சுனாமிப் பேரலை நிவாரண விடயத்திலும் அதேசக்திகள் எதுவித மாற்றமும் இன்றி தமது செயற்பாடுகளைத் தொடர்கின்றன. இம்முறை உலக வங்கியின் கணிப்பீட்டின்படி 60 சதவீதத்திற்கு மேற்பட்ட பாதிப்பு வடக்கு கிழக்குப்பகுதிகளுக்கும் சுமார் 38 வீத பாதிப்பு தென்பகுதிக்கும் ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பகுதி மக்களுக்கு மட்டுமல்லாது தென்பகுதி மக்களுக்காகவுமே நிதியுதவி வழங்கப் பல நாடுகள் முன்வந்துள்ள நிலையிலும் அந்த நிதியினை சிறிலங்கா அரசாங்கத்திடம் வழங்க அவை பின்னிற்கின்றன. இதற்குக் காரணம் பல கூறப்படுகிறது.

உதவி வழங்கும் அமைப்புகளின் கருத்தின்படி சிறிலங்கா அரச இயந்திரம் செயற்றிறமையற்றதாகும். இதற்குப்பல உதாரணங்களை அவை வைத்திருக்கின்றன. முன்னர் சிறிலங்காவின் அபிவிருத்திக்கென வழங்கப்பட்ட பெருமளவு நிதியுதவிகள் உரியமுறையில் பயன்படுத்தப்படாமல் வீணடிக்கப்பட்டிருக்கின்றன. பெருமளவு நிதி பயனற்றுத் திரும்பியிருக்கின்றது என்பதாகும்.

இதேவேளை அரசாங்க நிர்வாகம் குறித்து சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூட திருப்தி கொண்டவராக இல்லை. இது குறித்து அதிருப்தியை அவர் பலமுறை வெளியிட்டிருக்கின்றார். இப்பொழுது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற நிலையிலும் கூட ஜே.வி.பி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரச நிர்வாக இயந்திரத்தின் மீது அதிருப்தி கொண்டவர்களாகவே இருக்கின்றனர்.

இதேவேளை, அரசாங்கத்திற்குள் உள்ள அதிகாரப்போட்டிகள், முரண்பாடுகள் தனியாக இனப்பிரச்சினை விவகாரத்தில் மட்டுமோ அல்லது பொதுக்கட்டமை விடயத்தில் மட்டுமோ மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லை. அது தென்பகுதியின் அபிவிருத்தி விடயங்களிலும் எதிரொலிக்கவே செய்கின்றது.

ஜே.வி.பி அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மீது சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் ஊழல் முறைகேடு குற்றச்சாட்டுக்களை சுமத்தும் அதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் மீது ஜே.வி.பி.யினர் அதே குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி உதவிகளை வழங்கும் விடயத்தில் கூட ஜே.வி.பி. நடந்து கொண்ட முறை குறித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி மீது ஜே.வி.பி யும் பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவருகின்றன. அரசாங்கத்தின் வளங்களைப்பயன்படுத்தி ஜே.வி.பி அரசியல் இலாபம் தேட முயல்வதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருதுகிறார்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு நான்கு மாதங்களை நெருங்கிக்கொண்டிருக்கின்ற வேளையிலும் கூட பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குடியிருப்புக்களை அமைத்துக் கொடுப்பது தொடர்பில் உரிய இடங்களை அரசாங்கம் இனம் காட்டத்தவறி விட்டதாக அரசசார்பற்ற நிறுவனங்கள் குற்றம் சாட்டுகின்றன.

கடல் எல்லை-அதாவது கடற்கரையிலிருந்து எவ்வளவு தூரத்தில் குடியிருப்புக்களை அமைப்பது என்பதில் இன்னமும் சிறிலங்கா அரசாங்கத்தால் எல்லைகளை வகுக்க முடியவில்லை. இவ்விடயத்தில் திட்டவட்டமான முடிவுக்கு வந்து எல்லைக் கோட்டை வகுக்கும் பணி முடிவடைந்து விடவில்லை என்ற குற்றச்சாட்டுள்ளது.

இதேவேளை அரசஊழியர்களின் சம்பள உயர்வு வேலையற்ற பட்டதாரிகளுக்கு உடனடி வேலைவாய்ப்பு என கவர்ச்சி கரமான வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்தவர்கள் அவற்றை வழங்குவதற்குப் பொருளாதாரம் இடம்கொடுக்காத நிலையே தொடர்கிறது. இதன்காரணமாக சுனாமிப் புனரமைப்புக்கு வழங்கப்படும் நிதி இவ்வாறான தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு விடுமோ என்ற ஐயமும் உள்ளது.

மாறாக வடக்குகிழக்குப் பகுதிகளைப் பொறுத்தவரை அதிலும் குறிப்பாகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மூன்றாம் கட்ட- அதாவது நிரந்தரப் புனர்நிர்மாணப் பணிகளுக்குத் தயார்நிலையிலுள்ளது.

இப்பகுதியில் உடனடிப் புனர்நிர்மாணப் பணிகள் குறித்து பாராட்டாத நாடுகளுமில்லை, அமைப்புகளுமில்லை. ஐ.நா. பொதுச்செயலாளர் முதல் அனைவருமே இதனை வியந்திருக்கின்றனர். இரண்டாம் கட்டப்பணிகள் கணிசமான திருப்தியளிக்கக் கூடிய விதத்தில் நடந்தேறிக்கொண்டுள்ளன.

ஆனால் நிரந்தரப் புனரமைப்புப் பணிகள் தொடர்பில் ஆரம்பம் முதலே புலிகள் சர்வதேச உதவியைக்கோரி நிற்கின்றனர். இந்த நிதியுதவி கிட்டுவதில் முட்டுக்கட்டையாகத் தென்பகுதி இனவாதச்சக்திகள் உள்ளதை இன்று சர்வதேசம் புரிந்து கொண்டுள்ளதையே அண்மைக்காலச் சம்பவங்கள் புலப்படுத்துகின்றன.

ஐரோப்பிய மற்றும் ஆபிரிக்கா நாடுகளுக்கு அரசியல் சுற்றுப்பயணம் மேற்கொண்டுவிட்டு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நாடு திரும்பிய தருணத்தில் கொழும்பில் அமெரிக்கப் பிரதி ராஜாங்கச்செயலர் நடத்திய சந்திப்புக்கள் தென்னிலங்கைத் தரப்புகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் அமைந்திருந்ததாக விமர்சகர்கள் கூறுகின்றார்.

அதிலும் குறிப்பாக ஜே.வி.பி.யுடன் நடத்திய சந்திப்புக்குறித்தே இவ்வாறான விமர்சனம் முன்வைக்கப்படுகிறது.

அதேவேளை டோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதியுதவியைப் பெரும்பாலும் இழந்துவிட்டது போன்றதொரு நிலையே சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. அதேநிலை சுனாமி அனர்த்தப் புனரமைப்பு நிதிக்கும் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் சிறிலங்கா அரசாங்கத்தின் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியான சனாதிபதி சந்திரிகாவிற்குள்ளது.

அரசாங்கத்தின் மறுசீரமைப்புக் கொள்கைகளுக்கும், வெளிநாட்டு உதவிகளுக்கும் முட்டுக்கட்டைபோடும் வகையிலான பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி யின் செயற்பாட்டால் பெரும் பொருளாதார இறுக்கத்திற்குள் சிக்கித்தவித்த அரசாங்கத் துக்கு சுனாமி அனர்த்தத்திற்கென உடனடியாகக்கிடைத்த உதவியே சிறிது தளர்வுற வழிசமைத்தது. அப்பொழுதும் கூட பொருளாதார வளர்ச்சிப்போக்கு மூன்றிலொருபங்கு வீழ்ச்சியையே காட்டுகிறது.

**வேலவன்**

எனவே சுனாமி அனர்த்தப் புனரமைப்பு என்பது வெளிநாட்டு உதவியின்றிச் சாத்தியமில்லை என்பதை இப்பொழுது ஜே.வி.பி கூட ஒப்புக்கொள்கிறது. ஆனால் தமிழ் மக்களின் பகுதிகளுக்கு இந்த நிதி உதவி கிட்டிவிடக்கூடாது என்பதே அதன் பிடிவாதமாகும்.

அதேவேளை தென்பகுதியிலும் கூட சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இந்தப் புனரமைப்பு நிதியால் சாதகநிலை ஏற்பட்டு விடக்கூடாது எனவும் அது எண்ணக்கூடும்.

ஆனால் ஆட்சியைத் தக்கவைக்கும் நோக்குடன் ஜே.வி.பியின் எதிர்ப்பிற்கு அரசாங்கம் பணிந்தால் எதிர்காலத்தில் ஜே.வி.பி யை விட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலையே பரிதாபகரமாக இருக்கும்.

---

### -அரச ஊழியர்களுக்கான-

## பத்து இலட்சம் ரூபா கடன் திட்ட சுற்று நிருபம் வந்து சேர்ந்தது

சிறிலங்கா அரசாங்கத்தால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கான பத்து இலட்சம் ரூபா கடன் திட்டத்திற்கான சுற்று நிருபம் கிளிநொச்சி அரச செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

அரச ஊழியர்களாக ஐந்து வருட சேவையைப் பெற்றுள்ள அனைவரும் இக்கடன் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும். (10)

## உயிலங்குளம் மக்கள் உதவி

(மன்னார்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பெரியகல்லாறு மக்களுக்கு மன்னார் உயிலங்குளம் மக்களால் பாடசாலை உபகரணங்களும், பல இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை புத்தகங்களும் வழங்கப்பட்டன. இவைபெரிய கல்லாறுபங்குத்தந்தையிடம் கையளிக்கப்பட்டது. (18)

## வீதி விபத்தில் வயோதிபர் காயம்

(மன்னார்)

மன்னாரில் கடந்த வியாழன் இரவு ஏற்பட்ட வீதிவிபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்; பேருந்து நிலையத்தில் டொல்பின் ரக வான் அவ்வீதியில் வந்த முதியவரை மோதியது. இதனால் காயமடைந்த முதியவர் மன்னார் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். டொல்பின் வாகனச் சாரதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (18)

# அரசியல் எதிரிகளைப் பழிவாங்கவே சனாதிபதி ஆணைக்குழுக்கள் அமைப்பு

## —ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் தற்போது அரசாங்கம் ஒன்று இல்லை அரசாங்கம் கையாள வேண்டிய விசாரணைகளை எல்லாம் சனாதிபதி ஆணைக்குழு மூலம் சனாதிபதி மேற்கொண்டு வருவதானது நாட்டில் அரச நிர்வாகம் இயங்கவில்லை என்பதையே எடுத்துக் காட்டுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதி ஆணைக் குழு அரசியல் எதிரிகளை பழிவாங்கும் நடவடிக்கை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிரான கருத்தினை கொண்டவர்களுக்கு எதிராகவே இந்த ஆணைக் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (32)

# அனல் மின் நிலையத்திற்கு எதிராக நுரைச்சோலையில் ஆர்ப்பாட்டம்

சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நுரைச்சோலை அனல் மின்மையத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் நுரைச்சோலை யில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடை பெற்றது.

இதன் போது பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுமானால் அதன் காரணமாக பிரதேச மீன்பிடி பாதிக்கப்படும் அத்துடன் அமில மழை பெய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது.

இதேவேளை வரையறுக்கப்பட்ட சிறியநிலப்பரப்பே நுரைச்சோலையில் இருப்பதால் இந்தத் திட்டம் மக்களின் ஜீவனோபாயத்தைப் பாதிக்கும் எனப் போராட்டம் நடத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (32)

# சமாதானமே அரசின் பிரதான இலக்கு இதனைப் புலிகள் புரிந்து கொள்ள வேண்டும்

## -சிறிலங்கா பதில் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

யுத்தத்தை ஆரம்பிக்க அரசாங்கத்திற்கு எண்ணமில்லை. சமாதானமே அரசாங்கத்தின் பிரதான இலக்கு. இதனை விடுதலைப்புலிகள் புரிந்து கொள்ள வேண்டுமென்று சிறிலங்காவின் பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

சமாதானம் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று கொழும்புத துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்படையினரால் வழங்கப்பட்ட கரேஜஸ் என்ற யுத்தக்கப்பலுக்கு புதிய நாமம் சூட்டும் நிகழ்வில் அவர் பங்கேற்றார்.

இதன் போது உரையாற்றிய அவர் தேவையற்ற மோதல்களை உருவாக்கி அரசாங்கத்தைக் கோபமடையச் செய்ய விடுதலைப் புலிகள் முயற்சிக்கின்றார்கள், அரசாங்கம் ஒருபோதும் யுத்தத்தை ஆரம்பிக்காது. எனினும் யுத்தம் ஒன்றை தமிழீழ விடுதலைப்புலிகள் ஆரம்பிப்பார்களாக இருந்தால் அதனை எதிர்கொள்ளத் தயாராகவுள்ளோம். எந்த ஒரு கட்டத்திலும் யுத்தத்தை ஆரம்பிக்க அரசாங்கத்திற்கு எண்ணமில்லை. சமாதானமே அரசாங்கத்தின் பிரதான இலக்காகும்.

இதனை தமிழீழ விடுதலைப் புலிகள் உணர்ந்துகொள்ளவேண்டும் எனக்குறிப்பிட்டுள்ளார். (32)


## அறிவித்தல்

## தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகத்தின் எக்கிளையிலாவது 30.09.2003 ஆம் நாளுக்கு முன்னர் (01வருடகால அடகுக்கடன் சேவை), 30.06.2004 ஆம் நாளுக்கு முன்னர் (06 மாதகால அடகுக் கடன் சேவை) அடகுக்கடனைப் பெற்று உரிய காலத்தில் அவற்றை மீளச்செலுத்தத் தவறிய கடனாளிகளின் அடகு நகைகளை தமிழீழ வைப்பகம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. எனவே உரியவர்கள் 04.05.2005 ஆம் நாளுக்கு முன்னர் அடகு நகைகளை மீட்டுக்கொள்ளுமாறு அல்லது புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.11805)


# பொலிஸ் நிலையத்தில் கைதி மரணம் பொலிசாருக்கு எதிராக மக்கள் மறியல்

பொலிசாரால் கைதி ஒருவர் கொலை செய்யப்பட்டதாகத் தெரிவித்து ரக்குவான, இரத்தினபுரி வீதியைச் தடைசெய்துநேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் பிற்பகல் மூன்று மணியில் இருந்து மாலை வரை இடம்பெற்றது.

ரக்குவான பொலிசாரால் இக்கொலை மேற்கொள்ளப்பட்டதாக குற்றம்சுமத்தியே இந்தஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி தாக்குதல் ஒன்றின் பேரில் நீதிமன்ற அழைப்பாணையை பெற்றிருந்த சுசந்த குலதுங்க என்பவர் ரக்குவான பொலிசாரால் கைது செய்யபட்டார்.

எனினும் அவர் பொலிஸ் சிறைக்கூடத்தில் தற்கொலை செய்து கொண்டதாக அறிவிக்கப்பட்டது

இந்த நிலையில் இது தற்கொலை இல்லை எனவும் இது கொலைஎன்றும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தற்கொலை செய்துக் கொண்டதாக கூறப்படும் சுசந்த குலதுங்கவின் சடலம் அடங்கிய சவப்பெட்டியையும் வீதி யில் வைத்தே பிரதேச மக்கள் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை இது தொடர்பில் ரத்தினபுரி பிரதிப்பொலிஸ் அதிபர் கருத்துரைக்கையில் இது தற்கொலையே தவிர கொலை அல்ல எனக்குறிப்பிட்டார். (32)

## ரூ. ஒருகோடி பெறுமதியான ஹெரோயின் மீட்பு!

(கொழும்பு)

நீர்கொழும்பு களப்புப் பகுதியில் இருந்து எடுத்துவரப்பட்ட சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் வியாழன் காலை கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இந்தியாவிலிருந்து எடுத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனினும் இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. (32)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைப்பது தொடர்பில் அரசு அசமந்தம்

## -அ.சா.நிறுவனங்கள் விசனம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு தேவையான காணிகளை ஒதுக்கும் விடயத்தில் அரசாங்கம் அசமந்தப் போக்குடன் நடந்து கொள்வதாக குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகளை அமைப்பதற்கான நிதியுடன் தாங்கள் அரசாங்கத்தின் பதிலுக்கென காத்திருப்பதாக பல அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இதேவேளை, அரசாங்க அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகளை அமைக்கும் பணி தமாதமடைவதாக மீன்பிடித்துறை பிரதி அமைச்சர் நிஹால் கலப்பதி தெரிவித்துள்ளார். அரசாங்க அதிகாரிகளால் அரச[illegible]ற்ற நிறுவனங்கள் புறக்கணிக்கப்[illegible]வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்[illegible]ார். (32)


## தமிழீழ தேசியத் தொலைக்காட்சிக்கான நேர்முகத் தேர்வு

தமிழீழ தேசியத் தொலைக்காட்சிக்கான நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், செய்திவாசிப்போர், அறிவிப்பாளர், கணினி எழுத்தாளர், நிகழ்ச்சித்தொகுப்பாளர் ஆகிய பணிகளுக்குரிய நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

**யாழ்ப்பாணத்தில்**

25.04.2005 திங்கள் காலை 10.மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில்.

விண்ணப்பித்தவர்கள் குறிப்பிட்ட இடங்களுக்கு வரும்படி அழைக்கப்படுகின்றனர்.

(சி.11787) பணிப்பாளர்.



# Immediate Vacancy

## Tsunami Education project facilitator

Applications are requested for an experienced person to facilitatie in a new education project in vadamarachchi East and Mulaitivu districts.

Solidar is a consortium of 27 organisation from 12European Countries that support a broad portfolio of projects in sri lanka- focusing particulariy in the north east. The facilitator will conduct workshops throughout 34 transit camps in Vandamarachchi East and Mulaitivu. Using mulit-media equipement and working alongside counsellors to educate communities in the science and geography behind Tsunam's.

The avilable position would be based in kilinochchi. Applicants should possess:

* At least a University graduation in geography.
* At least two years teaching experience.
* Advanced communication skills.A high command of written and spoken English would be an advantage.
* computer literauy (Knowledge of *power point* software would be helpful)
* Available to work in the day time and evening.

An attractive salary based on skills and experience will be awarded to the successful candidates.
*please bring curriculum Vitae, references and any relevant written geography meterial.*

Applications are invited from male/female candidates including persone with disabilities that possess relevant experience.

interviews to be held on wednesday 27 th April between 10 *am*- 5*pm*

*pleasecome to ASB Office:*
*156 Jaffna Road.*
*paranthan.*
*Tel: 0212285070*

Solider

# இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் எயிட்சினால் பலியாகும் இராணுவத்தினர் தொகை அதிகரிப்பு

(புதுடில்லி)

**இந்திய வட கிழக்குப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழக்கின்ற இராணுவ வீரர்களைவிட எயிட்ஸ், நோய்க்குள்ளாகி உயிரிழக்கின்ற வீரர்கள் அதிகமென தெரிவிக்கப்படுகிறது.**

'எயிட்ஸ்' என்னும் உயிர்க் கொல்லி நோய் உலகம் முழுவதும் வேகமாக பரவிக் கொண்டு இருக்கிறது. 'எயிட்ஸ்' நோயால் அதிகமாக பாதிக்கப்பட்ட நாடு தென்னாப்பிரிக்கா இங்கு 53 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டு இருப்பதாக அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை தென்னாபிரிக்காவிற்கு அடுத்ததான நிலையில் இந்தியா உள்ளது. இந்தியாவில் தற்போது 51 இலட்சம் 'எயிட்ஸ்' நோயாளிகள் இருப்பதாக அதிகாரபூர்வ தகவல்தெரிவிக்கறது. ஆனால தென்னாபிரிக்காவையும் மிஞ்சி விட்டது. இந்தியா என்று 'எயிட்ஸ்' நோயை எதிர்ப்பதற்கான உலக நிதி நிர்வாக இயக்குனர் ரிச்சர்டு பீச்செம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் மட்டும் ஒருலட்சம் பேர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அங்கு இராணுவ சிப்பாய்களையும் எயிட்ஸ் நோய் தாக்கியுள்ளது எனும் தகவல் வெளியாகியுள்ளது. தீவிரவாதிகளின் துப்பாக்கி குண்டுகளுக்கு பலியாகும் வீர்களைவிட எயிட்ஸ் நோய்க்கு பலியாகும் வீரர்கள் தான் அதிகம் என்று அசாம் ரைபிள் டைரக்டர் ஜெனரல் போபிந்தர்சிங் கூறுகிறார்.

1992 ஆம் ஆண்டில்தான் முதன் முதலாக அசாம் ரைபிள் வீரர் ஒருவர் எயிட்ஸ் நோய்க்கு பலியானார். அதன் பின் 32 பேர் பலியாகிவிட்டனர். 180 பேர் கவலைக்கிடமான நிலையிலுள்ள னர்.

முகாமில் 'எயிட்ஸ்' நோய் பாதித்த ராணுவ வீரர் ஒருவர் தனக்கு நேர்ந்த நிலை இனி ஒருவருக்கும் வரக்கூடாது என்று உணர்ச்சி பொங்கக் கூறினார். நீண்டகாலம் மனைவியை விட்டு பிரிந்து இருப்பதால் ராணுவ வீரர்கள் எளிதாக பாதுகாப்பற்ற பாலியல் உறவில் விழுந்து வருகிறார்கள். இதனால் எயிட்ஸ் நோய் வந்துவிடும் என்பது கூட அவர்களுக்கு தெரிவதுமில்லை என்று உருக்கத்துடன் கூறினார்.



இந்தோனேஷியாவில் நடைபெறும் ஆசிய–ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நேற்று முன்தினம் புறப்பட்டார். அவரை காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி இராணுவ அமைச்சர் பிரணாப்முகர்ஜி உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல், மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத் ஆகியோர் வழியனுப்பி வைத்த காட்சி.

# புதிய போப்பாண்டவர் இந்தியா செல்கிறார்

அண்மையில் புதிதாக தெரிவான போப்பாண்டவர் 16 ஆவது பெனடிக்ற் இந்தியாவிற்கு செல்லவிருப்பதாக அறிவிக்கப்பட்டடிருக்கிறது.

போப்பாண்டவர் இரண்டாம் ஜோன்போல் அவர்களின் மறைவிற்குப்பின் சிலதினங்களிற்குமுன் வத்திக்கானில் இடம் பெற்ற புதியபாப்பரசர் தெரிவில் தெரிவான 16 ஆம் பெனடிக்ற் உலக கத்தோலிக்கர்களின் தலைவரானார் அதன் பின் தனது கடமைகளை ஆரம்பித்த பாப்பரசர் வெளிநாடு ஒன்றிற்கு செல்லஇருப்பதான தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. இதனை இந்திய டில்லியிலுள்ள கத்தோலிக்க செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது புதிய பாப்பரசரை தேர்ந்தெடுத்த கர்தினால் ஒருவரை மேற்கோள்காட்டியே இச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

புதிய பாப்பரசர் இந்திய மக்கள் மீதும் நாட்டின்மீதும் மிகுந்த பற்றும் மரியாதையும் வைத்துள்ளார் என அக்கர்தினால் தெரிவித்ததாக அவ் கத்தோலிக்க ஊடகம் தெரிவித்துள்ளது

# உழவு இயந்திரம் ஆற்றில் பாய்ந்தது 23 பக்தர்கள் உடல் நசுங்கிப் பலி

இந்தியா உத்தரபிரதேசத்தில் இடம்பெற்ற உழவு இயந்திரம் (ரக்ரர்)வீதியைவிட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 23 பேர் கோரமாக பலியாகினர்.

உத்தரப்பிரதேசம் மதுராப்பகுதியிலிருந்து அம்பா எனும் நகருக்கு மதப்பிரார்த்தனைக்கு சென்றநேரமே இடைநடுவில் விபத்துள்ளானதில் .23 பேர் அவ்விடத்திலேயே உடல் நசுங்கி பலியாகினர் மற்றும் 37 பேர் பலத்த காயமடைந்துள்ளனர்.

# ரயில் விபத்துக்கள் அதிகரிக்கிறது லல்லு. பதவி விலக வேண்டும்

## பா.ஜ.க.கோரிக்கை

ரயில் விபத்துக்கள் அதிகரித்து இருப்பதால், ரயில்வே மந்திரிப் பதவியை லல்லுப்பிரசாத் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று பாரதிய ஜனதா கோரிக்கை விடுத் துள்ளது.

இது பற்றி பாரதிய ஜனதா செய்தித் தொடர்பாளர் அருண் ஜெட்லி நிருபர்களுக்கு கூறியதாவது,

லல்லுப்பிரசாத் ரயில்வே அமைச்சராக இருக்கும் போது ரயில் விபத்துக்கள் அதிகரித்துள்ளன. கடந்த காலத்தில் ரயில் விபத்துக்கள் நடந்த சமயம் அப்போது ரயில்வே அமைச்சராக இருந்தவர்கள் ராஜினாமாச் செய்திருக்கிறார்கள். அல்லது ராஜினாமாச் செய்ய முன்வந்திருக் கிறர்கள் அதுபோல் லல்லுப்பிரசாத்தும் ராஜினாமாச் செய்ய வேண்டும். அவர் பதவி விலகக்கோரி பாராளுமன்றத்தில் பாரதிய ஜனதா குரல் எழுப்பும். ரயில் பயணி களுக்குப் பாதுகாப்பு குறைந்து விட்டது. என்றும் அவர் தெரிவித்தார். இந்திய குஜராத் மாநிலம் வதோரா அருகே கடந்த வியாழன் இடம் பெற்ற ரயில் விபத்தொன்றில் 15 இற்கு மேற்பட்டோர் பலியாகினர் என்பது இங்கு நோக்கத்தக்கது.

## ஒன்பது தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

காஷ்மீர் மாநிலத்தில் இரு வேறு சம்பவங்களில் ஒன்பது தீவிரவாதிகள சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். காஷ்மீர் மாநிலம் குப்வாரா மாவட்டம் பாகிஹகாரி பகுதியில் இந்தியப் பாதுகாப்பு படையினரை நோக்கி தீவிரவாதிகள் சுட்டனர்.இதன்போது இந்திய பாதுகாப்புப் படையினர் திருப்பிச் சுட்டதில் ஐந்து தீவிரவாதிகள் பலியாகியுள்ளனர்.

இதேபோன்று பாரமுல்லா மாவட்டம் தேகி ராம்பூர் என்ற இடத்தில் நான்கு தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்றும் இந்திய படைத்துறை தெரிவிக்கிறது.



தமிழகத்தில் இடம்பெற்ற பேருந்து விபத்தொன்றில் இரு பயணிகள்கொல்லப்பட்டுள்ளனர். மற்றும் பலர்காயமடைந்துள்ளனர். விபத்துக்குள்ளான பேருந்தில் இருந்து காயமடைந்த பயணிகள் அப்புறப்படுத்தப்படுவதனையே படத்தில் காண்கிறீர்கள்.



# திறமையற்ற பா.ம உறுப்பினர்களை திருப்பி அழைக்க மக்களுக்கு உரிமை உள்ளது

**–சோம்நாத் சட்டர்ஜி–**

பாராளுமன்றத்தில் திறமையாக செயற்படாத மக்களவை உறுப்பினர்களை திருப்பி அழைக்க மக்களுக்கு உரிமை உள்ளதாக சோம்நாத் சட்டர்ஜி கூறியுள்ளார்.

மக்களவை சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி நேற்று முன்தினம் நிருபர்களுக்கு கருத்துத் தெரிவித்தார். அப்போது மக்கள் தமது பிரதிநிதிகளை தேர்வு செய்து பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கிறார்கள். அவர்களை தேர்ந்தெடுக்க மக்களுக்கு உரிமை இருப்பது போல திருப்பி அழைக்கவும் அனுமதி உண்டு. சரிவர செயற்படாத மக்களவை உறுப்பினர்களை மக்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள சட்டம் கொண்டுவர வேண்டும். நான் அதை ஆதரிக்கிறேன்.

அரசியல் விவகாரங்களில் நீதிமன்றங்கள் அடிக்கடி தலையிட்டு வருகின்றன. ஜார்க்கண்ட் சம்பவம் இதற்கு ஒரு உதாரணம்.

விரைவில் ஆட்சிமன்றத்திற்குக்கும். நீதி மன்றத்திற்கும் இடையில் மோதல் வெடிக்கவும் வாய்ப்பிருக்கிறது. அப்படி ஒரு நிலை வந்து விடக்கூடாது என்றே நான் விரும்புகிறேன். இருப்பினும் நாட்டின் பெரிய நீதிமன்றமான உயர் நீதிமன்றின் உத்தரவுகளை நான் மதிக்கிறேன். ஜார்க்கண்ட் விவகாரத்தில் நான் உயர் நீதிமன்றத்திற்கு எதிராக எதையும் சொல்லவில்லை.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஆட்சி அமைக்கும் விவகாரத்தை நீதிமன்ற தலையீட்டின் மூலம் தீர்த்து வைக்கப்படாமல் பிரதமர் தலையீட்டின் மூலம் தீர்த்து வைத்திருக்கலாம் என்றார் சபாநாயக்கர்.

# துப்பாக்கி ஒப்பந்தம் பற்றி விசாரணை மத்திய அரசு உத்தரவு

பாரதிய ஜனதா ஆட்சி காலத்தில் செய்யப்பட்ட துப்பாக்கி ஒப்பந்தம் பற்றி விசாரணை நடத்த சி.பி.ஐ.க்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

தென்னாபிரிக்கா நாட்டில் உள்ள "டெனல்" என்ற இராணுவத் தளபாட உற்பத்தி தொழிற்சாலையில் இருந்து இந்திய இராணுவத்திற்கு கனரகத் துப்பாக்கிகள் வாங்கக் கடந்த 2006 ஆம் ஆண்டு,தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ரூ.20 கோடி மதிப்புள்ள இந்த ஒப்பந்தத்தின்படி 300 கனரகத் துப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டன. மேலும் 900 பீரங்கிகள் வாங்கப்படவிருந்தன.

இந்த இராணுவ ஒப்பந்தத்தில் ஊழல்புகார் கூறப்பட்டது.டெனல் நிறுவனம், இங்கிலாந்தைச் சேர்ந்த 'வராஸ்' நிறுவனம் வழியாக ரூ.1 கோடியே 40 லட்சத்தை இந்தியாவைச் சேர்ந்த நபருக்கு சட்டவிரோதமாக கொடுத்ததாக புகார் எழுந்தது. இதைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தத்தை தற்போதைய ஐக்கியமுற்போக்குக் கூட்டணி அரசு ரத்து செய்திருந்தது.

இந்த நிலையில்மத்திய இராணுவ மந்திரி பிரணாப் முகர்ஜி கூறுகையில், இது தொடர்பாக விசாரணை நடத்த சி.பி.ஐ.க்கு மத்திய அரசு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவித்தார்.


# காங்கிரசுடன் சமரசத்திற்கு இடமில்லை

## கருணாகரனின் மகன் முரளிதரன் —

காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பீடத்துடன் வரும் காலங்களில் சமரசம் செய்வதற்கு வாய்ப்பில்லை என கேரள மாநில காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் முரளிதரன் அறிவித்துள்ளார்.

கேர்ள மாநிலத்தில் பேரணிகள் நடத்தியதன் காரணத்தால் முரளிதரன் காங்கிரஸ் கட்சியிலிருந்து ஆறு ஆண்டுகள் நீக்கப்பட்டிருந்தார். இதனால் ஆத்திரமடைந்த முரளிதரன் காங்கிரஸ் தலைமைப்பீடத்துடன் தாம் எந்தவித சமரசமும் செய்யப்போவதில்லை என அறிவித்ததுடன் புதுக்கட்சி தொடங்குவதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளதாகவும் தெரிகிறது.

முரளிதரன் கேரள மாநில முன்னாள் முதல்வர் கருணாகரனின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.



காலி மைதானத்திற்கு மேலே அமைந்துள்ள பழைய டச்சு கோட்டை மைதானத்தில் 2001 பெப்ரவரியில் பயிற்சி மேற்கொண்ட இங்கிலாந்து கிரிக்கெட் அணி.

# காலி சர்வதேச மைதானத்தில் மீண்டும் போட்டிகள் நடத்த ஏற்பாடு

சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்ட காலி கிரிக்கெட் மைதானம் கைவிடப்படமாட்டாது. அங்கு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் போட்டிகள் நடைபெறும் எனத் தெரிய வருகின்றது.

கடந்த டிசம்பர் 26ஆம் திகதி இலங்கையில் சுனாமி தாக்கியபோது மிகவும் சேதமடைந்த பகுதிகளில் காலி கிரிக்கெட் மைதானமும் ஒன்று. இனிமேல் அங்கு சர்வதேச போட்டிகளை நடத்த முடியாது என உடனடியாக மதிப்பிட்டவர்கள் கருத்துத் தெரிவித்தனர். அதற்குப் பதிலாக கடல் பகுதியிலிருந்து சற்று தூரத்தில் புதிய மைதானம் கட்டப்படுமெனவும் அப்போது செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் சிதைந்த காலி மைதானத்தைப் புதுப்பிக்க கிரிக்கெட் நிர்வாகிகள் தயாராகவுள்ளது தெரிய வருகிறது.

அரங்கில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள அரசிடமிருந்து ஒப்புதலை எதிர்பார்த்துள்ளோம் கிரிக்கெட் நிர்வாகி ஜயனந்த வர்ணவீர தெரிவித்துள்ளார். "ஆடுகளத்தில் நான்கு முதல் ஐந்து அங்குலம் வரையிலான மணலை எடுத்துவிட்டு புதிய தளம் அமைக்க வேண்டும் தவிர, வடிகால் முழுவதும் மாற்றியமைக்கப்பட வேண்டும்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




## நாளை ஆரம்பம்

மேஜர் மாறன் நினைவாக கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெறவிருந்த மின்னொளியிலான கரப்பந்து சுற்றுப் போட்டி நாளை நடைபெறுமென தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் அ.இன்பன்தெரிவித்துள்ளார். (சோ)

## ராவிட் சிறந்த துடுப்பாட்ட வீரர் பாராட்டுகிறார் ஜோன்ரைட்



இந்தியாவின் வெற்றிக்கு பெரும் துணையாக இருந்த ஜோன்ரைட், ராகுல் ராவிட்டை சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று பாராட்டியுள்ளார்.

அவுஸ்திரேலிய வீரர்கள் மன ரீதியில் விளையாடுவதில் கெட்டிக்காரர்கள். அதே போல இந்தியாவில் ராகுல் ராவிட் உள்ளார் அவர் பந்து வீச்சாளர்களுக்கு கடும் சவாலாக உள்ளார். எல்லா ஆடுகளத்திலும் சிறப்பாக ஆடக்கூடிய சிறந்த துடுப்பாட்டவீரர் ராவிட் ஆவார்.

கங்குலியின் தலைவர் பதவி பாராட்டுக்குரியது. தற்போது இந்தியாவின் சிறந்த தலைவராக அவர் காட்சி அளிக்கிறார். இதற்காக அவரைவாழ்த்துகிறேன். அவர் மேலும் வெற்றி பெறவேண்டும் இவ்வாறு ஜோன்ரைட் கூறினார்.

# பார்படோஸ் டெஸ்ட் போட்டி

# வலுவான நிலையில் தென்னாபிரிக்கா



மேற்கிந்தியத்தீவுகளின் பார்படோஸில் நடைபெற்றுவரும் தென்னாபிரிக்க-மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இரண்டாம் நாளான நேற்று முன்தினம் ஆட்டநேரம் முடியும் போது தென்னாபிரிக்கா ஒரு விக்கெட்டை இழந்து 253 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையிலுள்ளது.

முன்னதாக ஏழு விக்கெட்டுக்களை இழந்து 292 ஓட்டங்களுடன் இரண்டாம் நாளில் ஆட்டத்தைத் தொடர்ந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி எஞ்சிய மூன்று விக்கெட்டுக்களையும் 20 பந்துகளில் நான்கு ஓட்டங்களைப் பெற்று இழந்தது. இரு விக்கெட்டுக்களை சோண்டகி பெற்றார். அத்துடன் அவர் நான்கு விக்கெட்டுக்களையும், அன்ரூ நெல் நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்சை தொடங்கிய தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித்தினதும், டி. வில்லியர்ஸினதும் சதங்களுடன் 253 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையிலுள்ளது. ஸ்மித் 104 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். வில்லியர்ஸ், டிப்பென்னார் முறையே 122, 23 என்ற ஓட்டங்களுடன் களத்திலிருந்தனர்.

## அகாஸி அரையிறுதிக்கு முன்னேறினார்



அமெரிக்காவில் நடைபெறும் கிளே கோட் சம்பியன் டென்னிஸ் தொடரின் காலிறுதிப் போட்டியில் அன்ரூ அகாஸி பிரான்சின் செபஸ்ரியன் கிறஸ்ஜீனை 4-6,6-1, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றுள்ளார். இதன் மூலம் அகாஸி,ஜேம்ஸ் பிளேக் என்பவரை 6-4, 1-6, 7-6 என்ற செட்டில் காலிறுதியில் வென்ற நிக்களோ லெப்பன்ரியை அரையிறுதியில் சந்திப்பார்.

இதற்கிடையில் மேலும் ஒரு ஆட்டத்தில் அன்டி றொடிக் லூயிஸ் ஹோர்னாவை 6-4,6-1 என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார். அரை யிறுதியில் ஆஸ்திரியாவைச் சேர்ந்த ஜர்ஜன் மெல்சரை சந்திப்பார் மெல்சர் நடப்பு சம்பியனான டொமிகாசை 2-6, 6-2, 6-4 என்ற செட்டில் வென்றவராவார்.

## டெண்டுல்கர் ஓய்வு பெறும் காலம் இதுவே பெற்றால் புகழ் பொன் எழுத்தால் பொறிக்கப்படும்



ரிச்சர்ட்ஸ்

இந்திய கிரிக்கெட்டிலிருந்து டெண்டுல்கர் ஓய்வு பெற வேண்டும் என்று ரிச்சர்ட்ஸ் கூறியுள்ளார்.

மேற்கு இந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் விவியன் ரிச்சர்ட்ஸ் இந்தியா சென்றுள்ளார். அங்கு அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்;இந்திய நட்சத்திரமாக திகழ்ந்த சச்சின் டெண்டுல்கர் சமீப காலமாக ஓட்டம் குவிக்க முடியவில்லை. ஆனாலும் அவர் கடந்த காலத்தில் புரிந்த சாதனைகளால் இன்னும் கூட ரசிகர்கள் அவர் மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கிறார்கள். எனவே இப்போது அவர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது நல்லது. அப்படி ஓய்வு பெற்றால் அவருடைய புகழ் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கும் ரசிகர்களால் என்றைக்கும் அவர் மதிக்கப்படுவார்.

அவர் 21 வயதாக இருந்த போது மிகப் பெரிய சாதனைகளைப் புரிந்தார். ஆனால் இப்போது அப்படி அவரால் விளையாட முடியவில்லை. இளம் வயதில் காட்டிய திறமையை இப்போது 32 வயதில் காட்ட முடியவில்லை. வயது ஏறும் போது திறமை குறைவது சகஜமே இதனால் ரசிகர்களின் எதிர்பார்ப்பை அவரால் நிறைவு செய்ய முடியவில்லை என்பது உண்மைதான் இப்போது டெண்டுல்கர் ஒரு சாதாரணமான ஆட்டக்காரரை போலதான் விளையாடுகிறார்.

சேவாக் துடுப்பாட்டம் செய்யும் ஸ்டைல் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நான் அவரை நேரில் சந்திக்க விரும்புகிறேன். அவர் பந்து வீச்சாளரை பற்றிக் கொஞ்சமும் கவலைப்படுவது இல்லை. அது என்னை கவர்ந்து இருக்கிறது. ஆனால் அவர் இன்னும் கொஞ்சம் கவனம் எடுத்து விளையாட வேண்டும். அவர் இன்னும் அனுபவம் பெறும் போது மிகச் சிறந்த வீரராக திகழ்வார். என்னுடைய ஸ்டைலை கொப்பிடியத்து சேவாக் அல்லது அப்ரிடி விளையாடுகிறார்கள் என்று சொல்வதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன் விவியன் ரிச்சர்ட்ஸ் என்றால் விவியன் ரிச்சர்ட்ஸ் தான் என்னை மற்றவர்களோடு ஒப்பிடுவதை நான் விரும்பவில்லை என்றார்.

## நடுவர் மீது துப்பினார் பார்தாக்கு மூன்று மாத தடை



நடுவர் மீது துப்பிய விவகாரத்தில், பிரான்ஸ் அணியின் நட்சத்திர கோல் காப்பாளர் பாபியன் பார்தாசுக்கு மூன்று மாதம் தடை விதிக்கப் பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரியில் ஒலிம்பிக் மார்சிலி வைடாட் காசபிளான்கா அணிகள் நட்பு கால்பந்து போட்டியில் மோதின. மார்சிலி அணிக்காக விளையாடினார் பார்தாஸ் இப்போட்டியின் போது மொராக்கோ நடுவர் அப்தெல்லா எல் அச்சிரி மற்றும் பார்தாஸ் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது ஆத்திரமடைந்த பார்தாஸ், நடுவர் மீது துப்பினார் இப் பிரச்சினை பெரிதாக போட்டி கைவிடப்பட்டது. இது தொடர்பாக பிரான்ஸ் கால்பந்து கூட்டமைப்பின் ஒழுங்கு முறை கமிட்டி தலைவர் ஜுன் மசேலா விசாரணை நடத்தினார். பார்தாஸ் ஆஜராகி விளக்கம் அளித்தார். பின்னர் மசேலா கூறுகையில், நடுவர் முகத்தில் பார்தாஸ் துப்பவில்லை. ஆனால் துப்பியது உண்மைதான். அவருக்கு மூன்று மாதம் போட்டிகளில் பங்கேற்க தடைவிதிக்கப்படுகிறது என்றார். 1994 இல் அறிமுகமான பார்தாஸ், 1998 இல் பிரான்ஸ் அணி உலக கோப்பை வெல்ல முக்கிய காரணமாக இருந்தார்.

## பரிஷ் வி.கழகம் வெற்றி

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்திவரும் 30 பந்துப்பரிமாற்றங்களுக்கு மட்டுப் படுத்திய துடுப்பாட்டத்தில் மானிப்பாய் பரிஷ்விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது. மானிப்பாய்இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியொன்றில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகமும், அரியாலை ஐக்கியவிளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

அரியாலை ஐக்கியவிளையாட்டுக்கழகம் 30 பந்துப்பரிமாற்றங்கள் முடிவடைந்த நிலையில் ஏழு இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டனர். துடுப்பாட்டத்தில் ஆகக்கூடிய ஓட்டங்களாக கிருபா31, இராஜ்குமார் 28, காந்தன் 25ஐ அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் தலா இரண்டு இலக்குகளை சாத்வீகன் சசிவாஸ் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.மானிப்பாய்பரிஷ் விளையாட்டுக்கழகம் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களை [illegible]றதன் மூலம் ஏழு இலக்குகளினாலு [illegible] ஒரு ஓட்டத்தினாலும் வெற்றிபெற்ற[illegible]ராஜ் 72 ஓட்டங்களையும், சாதவீகன் 2[illegible] ஓட்டங்களையும் [illegible]இழக்காமல் தமது [illegible]அணிக்காக ஆகக் கூடிய ஓட்டங்களாகப் பெற்[illegible]கொண்டனர் (41)

## யாழ். குடாநாட்டில் முத[illegible] தடவையாக பெண்கள் காற்பந்[illegible]ாட்ட போட்டி

யாழ்.குடாநாட்டில் முதல் தடவையாக வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டியில் பெண்கள் அணிகளுக்கான உதைபந்தாட்டப்போட்டிகள் இடம்பெறவுள்ளன. கடந்தாண்டில் யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் பெண்கள் அணிகளுக்கு இடையேயான போட்டிகள் இடம்பெற்ற போதிலும் மாவட்ட மட்டத்தில் இடம்பெறவில்லை. இம்முறை தென்மராட்சி கரவெட்டி யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுகளில் பெண்கள் அணிகள் களம் இறங்கி மோதியுள்ளார்கள்

இந்நிலைமையில் மாவட்ட மட்டத்தில் பெண் அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இடம்பெறவுள்ளன. இதில் குறிப்பான விடயம் யாழ். குடா நாட்டில் இன்று செக்கும்சரி சிவலிங்கமும் சரியென்று செயல்படுகின்ற ஒரு இளைய தலைமுறையினரின் அடாவடித்தனமான செயல்பாடுகள் இவ்விளையாட்டு வீராங்கனைகளின் உடல் உளமான மன நிலைகள் பாதிப்படையாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் உதைபந்தாட்ட ரசிகர்களுக்கும், சமூகத்திற்கும் ஏனையவீரர்க்கும் உண்டென்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும். (41)


## விக்பூட், வளர்மதி அணிகள் இவ்வாண்டு சம்பியனாக தெரிவு

தென்மராட்சிப்பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் பெண்கள் பிரிவில் நாவற் குழி விக்பூட் விளையாட்டுக்கழகமும், ஆண்கள் பிரிவில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்று இவ்வாண்டுக்கான பிரதேச செயலாளர் பிரிவு சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இறுதி ஆட்டங்கள் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன. பெண்களுக்கான இறுதிப்போட்டியில் நாவற் குழி விக்பூட் விளையாட்டுக்கழகமும் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டதில் நாவற்குழிவிக் பூட் விளையாட்டுக்கழகம் 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தில் மட்டுவில் வள்ர்மதி விளை யாட்டுக் கழகமும், நாவற்குழி விக்பூட் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டதில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (41)

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு



நாங்கள் ஒரு உன்னத இலட்சியத்திற்காகப் போராடிவருகிறோம். அந்த இலட்சியத் திற்காக உழைப்பதும் வாழ்வதும் எங்களுக்குப் பூரண ஆத்ம நிறைவைத் தருகிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 24-04-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## மாறாத ரட்ணசிறி!

முன்னாள் பிரதம மந்திரியும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும், தற்போதைய பதில் பிரதம மந்திரியுமான அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காவின் குரல் மீண்டும் தற்பொழுது சற்றுப்பலமாகவே கேட்கத் தொடங்கியுள்ளது. அதாவது நீண்ட கால இடைவெளியின் பின்னர் இவர் குரல் ஒலிக்கின்றது என்றே கூறலாம்.

ஆனையிறவில் கடும் மோதல்கள் நடந்துகொண்டிருக்கையில் 10,000சிங்கள இளைஞர்களை இராணுவத்திற்கெனத்திரட்டப் போவதாகக்கூறி தென்னிலங்கைக்குப் புறப்பட்டுச்சென்றவரின் குரல் அங்கு இடம்பெற்ற ஓரிரண்டு பொதுக் கூட்டங்களில் ஒலித்தபின் அடங்கிப்போய்விட்டது. அதாவது அவரின் பேச்சிற்கு இளைஞர்கள் செவிசாய்க்காத நிலையில் அவரின் பேச்சு அடங்கிப்போனது.

அதன் பின்னர் சுதந்திரக்கட்சிக்குள்ளேயே ஓரம்கட்டப்பட்டிருந்த நிலையில் கடந்த பொதுத்தேர்தலின் பின் சனாதிபதி சந்திரிகாவின் சிபார்சில் அமைச்சுப்பதவி வழங்கப்பட்டது. இவ்வாறு வழங்கப்பட்ட மைக்கு சனாதிபதி சந்திரிகாவின் உறுதியான விசுவாசியாகவும் நெருக்கடி காலத்தில் அவருக்கு உறுதுணையாகவும் அவர் இருந்தமையே காரணமாகும்.

இந்நிலையில் தற்பொழுது சனாதிபதியும், பிரதமரும் வெளிநாட்டிலிருக்கும் நிலையில் பதில் பிரதமராகப்பொறுப் பேற்றிருக்கும் அமைச்சர்ரட்ணசிறி விக்கிரமநாயக்கா மீண்டும் தனது நிலைப்பாட்டையும் தமிழ் தேசியத்திற்கு எதிரான கருத்தையும் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளார். வேறு விதமாகக்கூறுவதானால் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் எனலாம்.

அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, இனப்பிரச்சினைக்கு அரசியல்ரீதியில் -சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்பதற்கு எதிரானவர். இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணப்படவேண்டும் என்பதில் உறுதியானவர். அண்மையில் கூட அவரின் கருத்தானது சுனாமி நிவாரணப் பணிக்கான பொதுக்கட்டமைப்பு என்பதே தேவையற்றது என்பதாக இருந்தது.

இந்நிலையில் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகத் தமது பலத்த கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ள அவர் அத்தகையதொரு கட்டமைப்புத்தேவையற்றதெனவும் வாதிடுகின்றார். அது மட்டுமன்றி பொதுக்கட்டமைப்பு ஒன்று தொடர்பாக அரசாங்கம் இதுவரை இறுதி முடிவு ஒன்றையும் எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமன்றி யுத்தம் ஒன்றிற்கு அரசாங்கம் தயாராகவுள்ள தாகவும், புலிகள் சீண்டின் அரசாங்கம் யுத்தத்திற்கும் தயங்கப் போவதில்லை எனவும் அவர் சவால் விடுகின்றார். இதன்மூலம் பதில் பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா சுற்றிவளைத்து மூக்கைத் தொடுகின்றார் என்பது புரிந்துகொள்ளப் படமுடியாததொன்றல்ல.

அதாவது மீண்டும் ஒரு தடவை யுத்தம் ஒன்றை நடாத்த அவர் எத்தனை தூரம் ஆவலாகவுள்ளார் என்பதை உணர்ந்துகொள்வது ஒன்றும் கடினமான காரியமல்ல? ஆனால், சனாதிபதி சந்திரிகா நாட்டில் இல்லாதவேளையில் அவரின் நெருக்கமானவர் சனாதிபதி சந்திரிகாவின் கருத்துக்களுக்கு மாறான கருத்துக்களை வெளிப்படுத்துவதானது சற்று சிந்திக்க வேண்டியதொன்றே ஆகும்.

அதாவது பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் ஒருமித்த கருத்து இல்லை என்பதை வெளிப்படுத்த முனைகின்றாரா? அன்றி ஜே.வி.பிக்கு இணையாகப் பௌத்த பேரினவாத சக்திகளுக்குத் தலைமை கொடுக்க சுதந்திரக்கட்சிக்குள்ளும் "தலைவர்கள்" உள்ளனர் என்பதை வெளிப்படுத்த முற்படுகின்றாரா? என்ற கேள்விகளை எழவைத்துள்ளது.

ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா எதன் அடிப்படையில் இவ்வாறு நடந்துகொண்டாராயினும், சிறிலங்கா அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவோ சுனாமி அனர்த்தம் மீள்கட்டுமானத்திற்கான பொதுக்கட்டமைப்பு விவகாரத்திலோ முன்னேற்றகரமான நிலைப்பாடு ஒன்றிற்கு வரவில்லை என்பதே யதார்த்த நிலையாகும்.

பிரச்சினைகள் யாவற்றையும் மூட்டை கட்டிவைத்துவிட்டு சனாதிபதி சந்திரிகா பல நாட்களாக வெளிநாட்டில் தங்கியிருப்பதும், ஆளும் கூட்டணிக்குள் உள்ளவர்கள் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக வெவ்வேறு முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்வதும் அரசாங்கத்திடம் தெளிவான திட்டங்கள் எவையும் இல்லை என்பதை மட்டுமல்ல, விவகாரங்களைக்கையாளும் திறனியற்றவராக சனாதிபதி சந்திரிகா உள்ளதையுமே வெளிக்காட்டு வதாய் உள்ளது.

### - சிங்கள அரசியல் தலைமைகளிடம் -

# ஆக்கிரமிப்பு சிந்தனை இருக்கும் வரை அரசியல்தீர்வு ஒன்றைக் காணமுடியாது

### –திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன்

(திருமலை)

சிங்கள அரசியல் தலைமைத்து வங்களிடம் ஆக்கிரமிப்புச் சிந்தனை இருக்கும் வரை தமிழ்த்தேசியப் பிரச்சினைக்கு தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அரசியல்தீர்வு ஒன்றைக்காண முடியாது. சர்வதேச சமூகம் இத னைப்புரிந்து கொண்டுள்ளது என்று விடுதலைப்புலிகள் திருகோண மலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித் துள்ளார். அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கத்தின் இலங்கை இனப்பிரச்சினையும், அரசியல்தீர்வு யோசனைகளும் என்ற நூலின் அறிமுகம் மற்றும் வெளியீட்டு நிகழ்வில் நேற்றுகலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். "மீண்டும் யுத்தம் வேண்டுமா? என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு இன்று சிங்கள மக்களின் கைகளில் தான் தங்கியுள்ளது. சிங்கள மக்கள் இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தங்கள் மத்தியில் இருக்கும் யுத்தத்தை விரும்பும் சக்திகளை சிங்கள மக்கள் தூக்கியெறிய வேண்டும். இதன் மூலம் போரை நிறுத்துவ தற்கு சிங்கள மக்கள்முயற்சிக்க வேண்டும்'' என்றும் எழிலன் கூறினார்.

மீண்டும் ஒரு யுத்தம் வருமானால் இலங்கையில் அழிவுதான் மிஞ்சும் எம் மீது போர் திணிக்கப்படுமானால் அதன் உச்ச விளைவை நாடு அனுபவிக்கும் தமிழ்மக்களிலும் பார்க்க சிங்கள மக்கள்தான் போரினால் கூடுதலாகப் பாதிக்கப்படு வார்கள் என்றும் எழிலன் கூறினார்.

யுத்தநிறுத்தம் அமுலில் இருந்து வரும் மூன்றுவருடங்களாகத்தான் நாம் பொறுமை காத்து வருகின்றோம் என்று கூறிவிடமுடியாது. நாம் கடந்த 25 வருடங்களாகவே பொறுமை காத்து வந்துள்ளோம். இதற்குப் பின்பும் எமக்கு ஒன்றுமேயில்லை மீண்டும் எமது பயணத்தைத் தொடருவதைத்தவிர வேறு வழியில்லை என்றும் எழிலன் குறிப்பிட்டார்.

நாட்டில் காணப்படுவது இனங் களுக்கிடையிலான பிரச்சினை அல்ல. அரச பயங்கரவாதப் பிரச்சினைதான் இன்று காணப்படு கிறது. அரசியல் தீர்வு தொடர்பாகப் பேசியும், எழுதியும் கிடைக்காத நிலையில் நாம் ஆயுதம் தூக்கினோம். எதிரிஎந்த ஆயுதத்துடன் நிற்கின்றானோ அதே ஆயு தத்தையே நாமும் எடுத்துக் கொண்டோம். இந்த நிலையில் பேச்சுவார்த்தை முயற்சி ஆரம்பமானது. சமஷ்டிஅரசமைப்பின் அடிப்படையில் ஒன்று ஆரம்பத்தில் கூறப்பட்டது.

பின்னர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பு முன்மொழிவு முன்வைக்கப்பட்டது. கடல்கோளின் பின்னர் பொதுக்கட்டமைப்பு என்று படி இறங்கியது. இதற்கும் அரசு தயாராக இல்லை என்றால் நாம் என்ன செய்ய முடியும்? தமிழ் மக்கள் பாரம்பரிய வாழ்விடங்களாகக் கொண்டுள்ள பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் படி கோருகின்றோம். திருமலை மாவட்டத்தில் அரசாங்க அதிபர் ஒரு பெரும்பான்மையினத்தவர் இப்போது மேலதிக அரச அதிபராக இன்னு மொரு சிங்களவரே நியமிக்கப்பட்டி ருக்கின்றார்.

இவ்வாறான மனநிலையை சிங்கள அதிகாரவர்க்கம் தொடர்ந்து கொண்டிருக்குமானால் தமிழ் மக்கள் யாரை நம்புவது? என்றார் எழிலன் அரசினுள் மாற்றம் வரவேண்டும் அப்போது தான் நல்ல தீர்வுகாணமுடியும். நாம் போரை விரும்பவில்லை. போரின் கொடு மையை அனுபவித்தவர் நாம். அதன் வேதனை எமக்குத் தெரியும் போரில்லாது தீர்வு ஒன்றைக்காணக் கூடியதான மனமாற்றம் அரசில் ஏற்படவேண்டும். அல்லாமல் அரசாங்கம் தப்புக்கணக்குப் போட்டு செயல்பட்டால் நாம் எதற்கும் தயார். எதுவாக இருப்பினும் தயார். எனினும் நல்ல வழியில் நல்ல தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் காலத்தைக் கடத்தி வந்துள்ளோம். என்றும் எழிலன் மேலும் கூறினார். (25)

### -சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு-

# வீடுகளை அமைத்துக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை

### — ரணில்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்க வில்லையென எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஹிக்கடுவ பகுதி மக்களிடம் உரையாற்றியபோதே அவர் இவற்றைத் தெரிவித்தார். பாதிக்கப் பட்ட பகுதிகளில் அரசசார்பற்ற நிறுவனங்களும் ஏனைய சங்கங்க ளுமே வீடுகளை அமைத்துக்கொடுத் துள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்க ளினதும் மற்றும் ஏனைய சங்கங்க ளினதும் சேவைகளில் அரசாங்கம் குளிர்காய முயல்கின்றது.

சுனாமி நிவாரணமாக உலக நாடுகளிலிருந்து அரசாங்கம் பெற்ற நிதிக்கு என்ன நடந்தது. கிடைத்த உதவிப்பணத்தை அரசாங்கம் தனது பைக்குள் போட்டுக்கொண்டுள்ளது என்றே நான் கூறுகின்றேன் இன்னும் பாதிக் கப்பட்ட மக்கள் கூடாரங்க ளிலேயே உள்ளனர். அதனையும் மீறி இங்கு வீடுகள் அமைத்து கொடுக்கப் பட்டிருந்தால் அது பொது அமைப்பு களால்தான் நடைபெற்றிருக்கிறது. அரசாங்கத்தால் அமைக்கப்பட்டது எதனையும் காண முடியவில்லை.

தற்போது சனாதிபதியும், பிரதமரும் ஒவ்வொரு அமைப்புக்களையும் அழைத்து வீடுகளைக் கட்டிக் கொடுக்குமாறு கோருகின்றனர். அவ்வாறு அமைக்கப்பட்ட வீடுகளை தமது சனாதிபதி செயலகத்தால் அமைக்கப்பட்டது, பிரதமர் செயலகத் தால் அமைக்கப்பட்டது, என கூறுகின்றனர். எனினும் அரசாங்கத் தின் பணத்தில் இவை அமைக்கப்பட வில்லை. இது இல்லாதிருக்க இந்த அரசாங்கம் வீடுகளை அமைத்துக் கொடுக்கவென மேலும் ஐயாயிரம் கோடி ரூபாவை உலக வங்கியிடம் கோரியுள்ளது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

### சுகாதாரத் தொண்டர்களுக்கு

# அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருக்கும் நிபுணரால் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பு

(அலுவலக செய்தியாளர்)

அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருக்கும் டாக்டர் கேசினி சொஸ்ஷா அவர்கள் குடும்ப நல சுகாதார சேவை உத்தியோ கத்தர்களுக்கும், சுகாதார தொண்டர் களுக்கும், இரண்டு நாள் பயிற்சி வகுப்பு ஒன்றினை மேற்கொண் டுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிர தேசங்களில் கடமையாற்றிய வரும் குடும்ப நல சுகாதார உத்தியோகத் தர்களுக்கும், ஏனைய தொண்டர் களுக்குமான இரண்டு நாள் பயிற் சியானது நேற்று முன்தினமும் நேற்றும் கிளிநொச்சி மகாவித்தி யாலயத்தில் நடைபெற்றது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையினால் நடாத்தப்பட்ட இப் பயிற்சி வகுப்பில் 36 வரையான தொண்டர்கள் பயிற்சி பெற்றனர்.

இதில் அதிகமானோர் முல்லைத் தீவுப் பகுதியிலிருந்தும் ஏனையோர் கிளிநொச்சிப் பகுதியிலிருந்தும் பங்கு பற்றினார்கள். இந்தப் பயிற்சி வகுப்பிற்கு கேசினிசொஸ்ஷா அவர்களுடன் டாக்டர் சிவசங்கர் அவர்களும் இணைந்து கருத்துரை களை வழங்கியுள்ளார். (கு)

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு மன்னார் மக்கள் உதவி

(மன்னார்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மன்னார் மாவட்ட கிராம மக்கள் நிதியுதவி அளித்துள்ளனர்.


வங்காலை கிராமம் இரண்டு லட்சத்து 35743 ரூபாவும்,தாழ்வுப்பாடு கிராமம் இரண்டு லட்சத்து 11 ஆயிரம் ரூபாவும், மன்னார் நகர மக்கள் இரண்டு லட்சத்து ஏழாயிரம் ரூபாவும் பள்ளிமுனை மக்கள் ஒருலட்சத்து பன்னிராயிரத்து 305 ரூபாவும், உயிலங்குளம் மக்கள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், தலை மன்னார் மக்கள் 93 ஆயிரத்து 420 ரூபாவும், பேசாலை மக்கள் 80 ஆயிரம் ரூபாவும், கற்கடந்த குளம் மக்கள் 55 ஆயிரம் ரூபாவும், முருங்கன் மக்கள் 50 ஆயிரம் ரூபாவும், தோட்ட வெளி மக்கள் 32 ஆயிரம் ரூபாவும், விடத்தல் தீவு மக்கள் 30 ஆயிரத்து 550 ரூபாவும்,அரிப்பு மக்கள் 12 ஆயிரம் ரூபாவும் ஆள்காட்டி வெளி மக்கள் ஒன்பதாயிரத்து ஐந்நூறு ஆயிரம் ரூபாவும், அடம்பன் மக்கள் ஒன்பதாயிரம் ரூபாவும், நானாட்டான் மக்கள் எண்ணாயிரத்து 200 ரூபாவும், வஞ்சியான் குளம் மக்கள் ஏழாயிரம் ரூபாவும்,அளவக்கை மக்கள் நாலாயிரம் ரூபாவும், பன்றிவிரிச்சான் மக்கள் 3000 ரூபாவும் தேவன் பிட்டி மக்கள் 3000 ரூபாவும், கிளியன்குடியிருப்பு மக்கள் 2000ரூபாவும், கொடுத்து உதவியுள்ளனர்.

(18)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு ஜேர்மன் மக்கள் உதவி வழங்கல்

(புதுக்குடியிருப்பு)

ஜேர்மன் நாட்டின் அல்டன் கோவன், யூமிச் ஆகிய நகரங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களான எமில்பிராங், கயின்றி சோமல் ஆகிய இருவரின் தொகு



திகளில் உள்ள மக்களால் சேகரிக்கப்பட்ட நிதியுதவியால் முல்லைத் தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் வட்டுவாகல், செல்வபுரம் ஆகிய கிராம மக்களின் சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக மீன்பிடிக்கும் சிறு கைத்தொழிலுக்குமாக உதவிகள் வழங்கப்பட்டது.

இவ் உதவிகள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அவர்கள் ஊடாக, முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் துயர்துடைப்பு நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ் உதவி வழங்கும் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு நேற்றுகாலை 10.30 மணிக்கு முல்லைத்தீவு வட்டுவாகலிலுள்ள பொதுநோக்கு மண்டபத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனதுணைப் பொறுப்பாளர் சின்னண்ணா அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

பொதுச்சுடரை வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அவர்களும் அவரது துணைவியாரும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து கருத்துரையினை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் சி.வேதவனம், முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், தமிழீழக்கடற்படைத் தளபதிகளில் ஒருவரான தினேஷ், முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுற வுச்சங்கங்களின் சமாசத் தலைவர் அ.மரியராசா ஆகியோர் வழங்கினர்.

ஜேர்மன் நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வன்னிபாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அவர்களுக்கும் இடையிலான தொடர்பாளர் ந.ஜெயக்குமார் அவர்களின் முன்னிலையில் வைத்து படகுகள், துவிச்சக்கர வண்டிகள், தையல் இயந்திரங்கள் அழககங்கங்களின் உபகரணங்கள் என்பன பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. இதனை வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அவரது துணைவியார், முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லை. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் மூர்த்தி, தமிழீழக்கடற்படைத் தளபதிகளில் ஒருவரான தினேஷ், சமாசத் தலைவர் மரியராசா ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவரான ஜெயக்குமார் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, இந்நிகழ்வு ஆரம்ப நிகழ்வு எனவும் இப்பாதிப்புற்ற மக்களுக்கான உதவித்திட்டம் தொடர்ச்சியாக இடம் பெறவுள்ளதாகவும் தெரிவித்தார். (08)



இரணைமடுப்பகுதியில் நேற்று விபத்துக்குள்ளான நிலையில் டிப்பர் வாகனம்

# புலனாய்வு உயரதிகாரியை தேடும்பணியில் அரசபடைகள்

(கொழும்பு)

காணாமல் போன பயங்கரவாத தடுப்புப் பிரிவு முக்கிய அதிகாரி ஜெயரட்ணத்தைத் தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் கூறுகின்றனர்.

இது குறித்த விசாரணைகளும் அவரைக் கண்டு பிடிப்பதற்கான முயற்சிகளும் துரிதகதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனை அடுத்து நாடு முழுவதிலும் உள்ள பொலிஸ் மையங்கள் உசார்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பொலிஸ் துறையின் பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினர் பொலிஸ் துறையின் புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் இவரைக் கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# பாரவூர்தியில் இருந்து வீழ்ந்தவர் பரிதாபகரமாக மரணம்

(பளை)

பளை பாரவூர்தித் தரிப்பிடத்தில் பாரவூர்தி ஒன்றிலிருந்து வீழ்ந்து ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றள்ளது. அச்சுவேலியைச் சேர்ந்த சின்னப்பு தம்பிரத்தினம் (வயது 47 என்பவரே இவ்வாறு பலியானவராவார்.

இச் சம்பவம் தொடர்பாக பளை காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சடலம் கிளி மாவட்ட வைத்திய சாலைக்கு பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (11)

# சேது சமுத்திரத் திட்டப் பாதிப்புக் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை

-சூழல் பாதுகாப்பு அமைப்புத் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் உள் முரண்பாடுகள் காரணமாக சேது சமுத்திரதிட்டம் தொடர்பில் அது உரிய கவனத்தை செலுத்த தவறி வருவதாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பின் தலைவரும் சட்டத்தரணியுமான ஜெகத் குணவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கைக்கு மிகப் பெரிய பாதிப்பினை ஏற்படுத்தும் இந்தத் திட்டம் தொடர்பில் சரியான விளக்கத்தை அரசாங்கம் கொண்டிருக்கவில்லை. சேது சமுத்திர திட்டத்தை தடுக்க வேண்டியது அரசாங்கத்தினது கடமை மட்டுமல்ல. இதில் ஐக்கிய தேசியக் கட்சியும் முனைப்பு காட்ட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## போராளிகளின்..

நாசப்படுத்தியுள்ளனர். அரசியல் போராளிகளின் வாகனச் சாரதியை தகாத வார்த்தைகளால் தூசித்தனர். யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு முரணான எந்தப் பொருட்களும் இல்லாத போதும் இவ்வாறு திட்டமிட்ட முறையில் ஆத்திரமூட்டும் வகையில் சிறிலங்கா படையினர் செயற்படுவது விடுதலைப் புலிகளை வலிந்து மோதலுக்கு தூண்டும் செயல் என மட்டு. அம்பாறை அரசியல் துறையினர் கண்டித்துள்ளனர். இது ஒரு யுத்த நிறுத்த மீறல் என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

## புலிகளின்..

கடந்த வாரம் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றொக்காவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழு சந்தித்தது. யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகளாகின்றன. இக்காலப் பகுதியில் அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் விடுதலைப்புலிகள் உறுதிப்பாட்டுடன் ஈடுபட்டு வந்துள்ளனர். ஆனால், இம்மூன்று வருட காலத்தில் அரசாங்கம் மேற்கொண்டு வந்துள்ள நடவடிக்கைகளோ, விடுதலைப்புலிகளை இப்பாதையில் தொடர்ந்து செல்வதை ஊக்குவிப்பதாக அமையவில்லை என்பதை நாம் கிறிஸ்ரினா றொக்காவுக்கு தெரியப்படுத்தினோம். றொக்காவும் அதனை ஏற்றுகொண்டார். இன்று விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு இலங்கை அரசாங்கத்தைக் கொண்டு வந்தது விடுதலைப்புலிகளின் [illegible] பலம் தான் என்பதையும் கிறிஸ்ரினா றொக்காவிடம் வலியுறுத்தினோம். அப்போதுதான் விடுதலைப் புலிகளின் வன்முறையைத்தான் நாம் எதிர்க்கின்றோம். தனிநாட்டுக் கோரிக்கையை அல்ல. அவர்கள் வன்முறையைக் கைவிடுவதாக அறிவித்தால், அவர்களுடன் நெருக்கமாக பணிபுரிய முடியும். என்றும் கிறிஸ்ரினா றொக்கா முதல் தடவையாக எம்மிடம் தெரிவித்தார்.

எமக்குக் கிடைக்க வேண்டிய அரசியல் தீர்வு, நாட்டின் இறைமையைப் பகிர்வதாக அமைய வேண்டும். தமிழ் மக்களின் பாதுகாப்பு, தமிழர் தாயகப் பிரதேசத்தின் பாதுகாப்பு இவற்றை உறுதி செய்வதாக அதிகாரப் பகிர்வு அமையவேண்டும். மண்ணின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாததால் தமிழர் தாயகத்தில் பெரும்பான்மையினப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. தாயகத்தின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றார். (25,32)

## இரண்டாவது..

றும் கலை இலக்கிய போட்டி என்பனவற்றின் தொடர்ச்சியாக நேற்றும் நிகழ்வுகள் நடைபெற்றன.

காலை 9.00 மணிக்கு போர்ப் பயிற்சிக் கல்லூரியில் கவியரங்கப் போட்டிகள் ஆரம்பமாகின. இப் போட்டிகளை குட்டிசிறீ மோட்டார் படையணியின் சிறப்புத்தளபதி கோபால், சோதியா படையணி தளபதி மதுரம் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இப்போட்டிகள் இடம்பெற்று பரிசளிப்பும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## தேசியத்...

இ.வசந்தரூபன், ஆசிரியர் சங்கச் செயலாளர் செ. தவரட்ணம் ஆகியோர் வழங்கினர்.

இந்த பாராட்டுக் கேடயம் வழங்கும் நிகழ்விற்கு கடல்வள கற்கை நெறிப்பகுதி ஆசிரியர் பரமேஸ்வரன் தலைமை தாங்கினார்.

கரு [illegible] ரைகளினை வடமராட்சி க. [illegible] றொழிலாளர் கூட்டுறவுச் சங்க தலைவர், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் ஆகியோர் வழங்கினர். சிறப்புரையினை அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் நிகழ்த்தினார்.

இந்த பாராட்டுக் கேடயம் வழங்கும் நிகழ்வில் கடல்வள கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த ஆசிரிய மாணவர்கள் மற்றும் கல்விக்கழக துணைப் பொறுப்பாளர், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (கு,தீ)

## வடமராட்சியில்...

வைரவர்ஆலய அருகாமையிலுள்ள சிறிலங்கா இராணுவக் காவலரணுக்கு முன்னால் நண்பகல் 12.30 மணியளவில் இவ்விபத்து இடம் பெற்றது. விபத்து நடைபெற்றதையடுத்து சிற்றூர் தியின் சாரதி சம்பவ இடத்திலிருந்து தப்பியோடிச் சென்று நெல்லியடிப் பொலிசாரிடம் சரணடைந்து கொண்டார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிசார் விபத்தின் தன்மைகளைப் பதிவு செய்து உடனடியாக விபத்திற்குள்ளான சிற்றூர்தியை அங்கிருந்து அப்புறப்படுத்தி பாதுகாப்பைப் பலப்படுத்தியிருந்தனர்.

பலியான வயோதிபரின் சடலம் மந்திகைஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு பிரேதப் பரிசோதனைகளை மேற் கொண்ட மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேல்ப்பிள்ளை சடலத்தை உறவினர்களிடம் மாலை 6.30 மணியளவில் ஒப்படைத்தார். (கா)

## தீச்சுவாலை...

போட்டி துவிச்சக்கரவண்டி ஓட்ட சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடைபெறும். போட்டிகளில் வெற்றிபெறும் வீரர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக தமிழீழ விளையாட்டுத்துறை அறிவித்துள்ளது.

திரு இங்கிலிஷ்

திருநகரில் புதிய வகுப்புக்கள்

வயது வந்தோருக்கு

மே 05 ஆம் திகதி ஆரம்பம்.
மாலை 05:30 மணிக்கு

பெயர்களைப் பதிவு செய்யவும்.

சிறுவர்களுக்கு

நவீன ஆளுமைக்கல்வியுடன் கூடிய ஆங்கிலம்.
5 வயது முதல் 9 வயது வரை
மே 06 ஆம் திகதி ஆரம்பம்
கிழமை நாட்களில் மாலை 04.00 முதல் 06.00 மணிவரை.

பெயர்களைப் பதிவு செய்யவும்.

(சி.11812) நிர்வாகம்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது